Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 17 (21.03.2003) வெள்ளிக்கிழமை இதழ் :169



ஜப்பானின் பிரபலமான பியூஜி எரிமலையும் பனிபடர்ந்த ஏரியும் பின்னணியில் இருக்க, பேச்சுக்களில் கலந்துகொண்ட அனைவரும் ஒருமித்து எடுத்துக்கொண்ட படம்.



பீரிஸ், அகாஷி, ஹெல்கிஸன், பாலா - ஜப்பான் பேச்சுக்களின் நிறைவில் ஒருமித்த உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் அபூர்வமான ஒரு காட்சி.

# உலக அரசியலமைப்புகள் ஆராய புலிகள் குழுவினர் புறப்படுவர்!

## அதிகாரப் பரவலாக்கல் பேச்சுக்கு முன் நடவடிக்கை

(ரோக்கியோ)

இம்மாத இறுதிக்குள் விடுதலைப் புலிகளின் 20 பேர் கொண்ட குழுவொன்று, ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கும் வேறு சில நாடுகளுக்கும் விஜயம் மேற்கொண்டு அந்நாடுகளின் அரசியல் அமைப்புக்கள் குறித்து ஆராயவுள்ளது. அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசு - புலிகள் பேச்சுக்கு முன், இக்குழுவின் இறுதி அறிக்கை பரிசீலிக்கப்படுமென நேற்றைய மூன்றாம் நாள் சமாதானப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

6 ஆம் கட்டப்பேச்சுக்களின் மூன்றாம் நாளான நேற்று, அதிகாரப்பகிர்வு மற்றும் நிதிக் கையாள்கை, வரி விதிப்பு குறித்துப் பேசப்பட்டது. மாலை அமர்வில் சிறான் செயற்பாடுகள் ஆராயப்பட்டன.

இறுதிநாளான இன்று, இதுவரை ஆராயப்பட்ட விடயங்களின் இறுதித் தீர்மானங்களோடு அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்படும்.

# ஈராக் மீது அமெரிக்காவின் தரைத்தாக்குதல் ஆரம்பம்



தரைத் தாக்குதலை ஆரம்பித்துள்ள அமெரிக்கப் படையினர்.

*மேலும் படங்களும் முன்வந்த செய்திகளும் 2 ஆம் பக்கத்தில்.*

நேற்று அதிகாலை ஈராக் மீதான போரை அமெரிக்கா ஆரம்பித்ததன் பின்பு - நேற்று மாலை ஜி.எம்.ரி. நேரப்படி 5 மணியளவில் - அமெரிக்கப் படைகள் தரைவழித் தாக்குதலை ஆரம்பித்தன.

அமெரிக்க விமானங்களாலும், ஏவுகணைகளாலும் தாக்கிச் சிதைக்கப் பட்ட தென் ஈராக்கியப் பகுதி ஒன்றினூடாக- இந்தத் தரைவழித் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈராக்கை நேக்கி ஹொவிட்சர் ஆட்லறிகளும், பல்குழல் பீரங்கிகளும் செக்கன் தவறாது பாய்ந்து வருவதாகவும் தலைநகர் பக்தாத் பெரும் தீப்பிளம்புடன் எரியுண்ட நகரமாகத் தோற்றமளிப்பதாகவும், அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கான நிதியுதவியை வளைகுடாப் போர் பாதிக்கும்!

## ரோக்கியோவில் தூதுவர் யசுசி அகாஷி

(ரோக்கியோ)

வளைகுடாப்போரினால் இலங்கை சமாதானப்பேச்சுக்களில் பாதிப்புக் கள் ஏற்படலாம். எனினும், பேச்சுக்க ளைத் தொடர்ந்து நடத்த அனைவ ரும் இணங்கியுள்ளோம். எவ்வாறா யினும் இலங்கைக்கான உதவிவழங் கும் நாடுகளின் நிதியுதவிகளில் சிறிது பாதிப்புக்கள் ஏற்படலாம் என, ஜப் பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்துள்ளார்.

நேற்றைய பேச்சுக்களின் முடிவில் அகாஷி செய்தியா ளர்களிடம் கருத்துத் தெரி வித்தபோதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

ஜப்பானிய அரசு முழு இலங்கைக்குமான நிதியுதவி யையே வழங்குகின்றது.

இலங்கைக்கு, அதன் ஐந்து அபிவிருத்தித் திட்டங் களுக்கு ஜப்பான் உதவவுள் ளது. இதில் ஒரு திட்டம் மட்டுமே வட-கிழக்குக்கா னது. இது பாரிய நீர்ப்பாசனத்துக் கான உதவியாகும். அத்துடன், இராணுவக்கட்டுப்பாடு மற்றும் புலிக ளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மிதிவெடிகளை அகற்றவும் ஜப்பா னிய அரசு உதவி வழங்கும்.



பாரபட்சமற்ற எமது நிதியுதவி களை, இலங்கையில் சில அரசியல் கட்சிகளும் சில பத்திரிகைகளும் சந்தேகத்துடன் பார்க்கின்றன. நாம் புலிகளுக்கு ஆதரவு அளிப்பதாக அவை குற்றஞ்சாட்டுவது எமக்குக் கவலை தருகிறது என்றும் அகாஷி குறிப்பிட்டார்.

வளைகுடாப்போரின் மத்தியி லும், இலங்கை சமாதான முயற்சிக் கான சர்வதேச ஆதரவைத் திரட்டு வதான ஓர் கருத்தரங்கை வொஷிங் ரனில் நடத்த அமெரிக்கா திட்டமிட் டுள்ளது என்று குறிப்பிட்ட அகாஷி, ஏப்ரல் 14 ஆம் திகதி அமெரிக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## *விண்ணாணம் விநாசியர்*



தினவு தணிக்கிறதுக்கு வல்லரசு களுக்கு உதுவும் ஒரு வழி பார்...!

# அமெரிக்கத் தாக்குதலை அடுத்து எரிபொருளுக்கு முண்டியடித்த மக்கள்!

## தட்டுப்பாடு இல்லை என்கிறார் முகாமையாளர்

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதைய டுத்து, எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்கின்ற அச்சத்தினால், குடாநாட்டில் எரிபொருளைச் சேமிப் பதற்காக நீண்டவரிசைகளில் பொது மக்கள் நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூடியிருந்த மக்க ளைக் கட்டுப்படுத்த முடியாது ஊழி யர் திணறினர். திடீரென அதிகரித்த மக்கள் தொகையினால் சில இடங் (10 ஆம் பக்கம் பார்க்க)



சமாதான முயற்சிக்கு தமது முழு ஆதரவைத் தெரிவித்து புலிகளை சந்தித் துப் பேச்சு நடாத்தும் ஜப்பானிய சங்கநாயக்கர் வண. உபதிஸ்ஸ தேரர்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-626)

# ஈராக் மீதான போர் ஆரம்பம்



ஸ்டெல்த் எப்-117 ரக விமானம்.



பக்தாத்தில் வீழ்ந்து வெடிக்கும் அமெரிக்க ஏவுகணை.




போர் வெடித்த செய்தியுடன் ஜப்பானியப் பத்திரிகை.

அமெரிக்கா தலைமையிலான கூட்டு இராணுவப் படை, ஈராக் மீதான போரை,. நேற்று அதிகாலை 5.34 மணிக்கு (இலங்கை நேரம் 7.34 மணி) அமெரிக்க போர்க் கப்பலில் இருந்து ரொம்ஹொக் ஏவுகணைகளைச் செலுத்தி ஆரம்பித்தது.

அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான எப்-117 நைட்ஹோக் ஸ்டெல்த் (F-117 NIGHT HAWK STEALTH) குண்டுவீச்சு விமானங்கள், ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் ஐந்து முக்கியஸ்தர்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை நடாத்தியுள்ளதாக அமெரிக்கா அறிவித்தது. இந்த 5 முக்கியஸ்தர்களில், ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனும் அவரது புதல்வரும் அடங்குவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குண்டுவீச்சு விமானங்கள் பக்தாத்தினைத் தாக்கியதும், ஈராக்கிய விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பதினைந்து நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக, அமெரிக்க விமானங்களை நோக்கி ஏவப்பட்டுக் கொண்டிருந்ததாக, மேற்கு ஐரோப்பிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

மேற்படி தாக்குதல்கள் நடைபெற்று ஒரு மணி நேரத்தின் பின்னர், ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன், நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் நேரடியாக உரையாற்றினார். அவ்வுரையிலே, ஈராக் மக்களை அமெரிக்கத் தாக்குதல்களை எதிர்த்துப் போராடும்படி கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, நேற்று அதிகாலை நடைபெற்ற ரொம்ஹொக் ஏவுகணை மூலமான முதலாவது தாக்குதல், யுத்தத்தைத் தொடங்கும் அளவிற்கு பெரியளவிலானதாக அமையவில்லை. மாறாக, போரினைத் தொடங்கும் ஒரு அறிகுறியாகவும், ஈராக்கிய அரசியல் தலைமைகளை இலக்கு வைத்ததுமானதாகவே அமைந்திருந்தது என, மேற்கு ஐரோப்பிய ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலையடுத்து ஐ.நா. செயலாளர் கோபி அனான், ஈராக்கிய மக்கள் யுத்தத்தின் பேரழிவுகளைச் சந்தித்துள்ளனர் எனத் தனது கவலையை வெளியிட்ட அதேவேளை, அமெரிக்காவும், பிரித்தானியாவும்- யுத்த சூழ்நிலையில் பொது மக்களைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேசச் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## குவைத் மீது ஸ்கட் ஏவுகணை ஈராக் நேற்று ஏவியது

ஈராக், குவைத் மீது நேற்று குறைந்தது இரண்டு ஸ்கட் ஏவுகணைகளைச் செலுத்தியுள்ளது. இவற்றில் ஒன்று, அமெரிக்காவின் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணையான பெட்றியட்டினால் தாக்கி அழிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், ஈராக்கிய ஏவுகணைத் தாக்குதலினால் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஈராக், கப்பல் எதிர்ப்பு ரக ஏவுகணைகள் இரண்டையும் ஏவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கட் ஏவுகணைக்குப் பதிலான ஈராக்கின் சொந்தத் தயாரிப்பான அல் சமவுட் ஏவுகணைகளில், 70 ஏவுகணைகள் அண்மையில் ஐ.நா ஆயுதப் பரிசோதகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து அமெரிக்காவின் கேந்திர நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சான்பிரான்சிஸ்கோ பாலமருகே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கப் படையினரையும் ரோந்துப் படகையும் படங்களில் காணலாம்.



அமெரிக்காவின் பெட்றியட் ஏவுகணை புறப்படும் காட்சி.

## கடின, நீண்டபோர் ஆரம்பம்- புஷ் ஆக்கிரமிப்பை முறியடிப்போம்- சதாம்

ஈராக் மீதான, நீண்டதும் கடினமானதுமான போரை அமெரிக்கக் கூட்டணிப் படைகள் ஆரம்பித்துள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்றுத் தாக்குதல் ஆரம்பித்த பின் தொலைகாட்சியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.



அமெரிக்கத் தொலைக்காட்சியில் புஷ் உரையாற்றும் காட்சி.

இஸ்லாத்துக்கு எதிரான ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்படுவர் என, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன், நேற்று தொலைக்காட்சியுரையில் குறிப்பிட்டார். ஈராக்கிய மக்கள் தமது நாட்டைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மலிவு விற்பனை
20% முதல் 50% வரை
புதுக்கணக்குப் போடவிருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-687)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

CC Center For Computer Studies
Computer College
கணனிக் கல்லூரி
337, Kasthuriyar Road, Jaffna.
Telephone & Fax - 021 3497
E.mail: Collegeofcom@bharatmail.Com
COMPUTER COLLEGE
சிறியவர்! பெரியவர் அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்
MS office
* MS Word * MS Excel
* MS Access * MS Power Point
Desk Top Publishing
* Corel Draw * Adobe Photo shop
Visual Basic
Internet & E-Mail
GIT
குறிப்பு- ☆ தமிழிலும் விரிவுரைகள், மற்றும் குறிப்புக்கள்
☆ இரவுநேர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மேலதிக விபரங்களுக்கு:-
Computer College
கணனிக் கல்லூரி, 337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 021- 2222827
(சி-698)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த
மாயி
நேரம்:- 10.30, 2.30, 6.30 (சி-628)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பிரபு, வைஜயந்தி நடித்த
வண்ணத்தமிழ் பாட்டு
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
RUSH HOUR - 2
(சி-627)

SATS - TECH
KTV SCV SUN NEWS SUN TV
வடபகுதி கேபிள் T.V இயக்குநர்கள் மற்றும் செய்மதி அன்ரனா மூலம் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் அனைவருக்கும் sats-tech தரும் நற்செய்தி K T.V. ,SUN NEWS,SCV சனல்களை கண்டுகளிக்கக்கூடிய Decorder Smart Card தேவையானவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். அத்துடன்,
சண் டீ.வி
K T.V.
SUN நியூஸ்
SCV
(மற்றும் All Free to Air)
Smart Package:- Rs.50,000 only (Including Dish Antenna / LNBF/ Decorder Smart Cart / One year viewing Charge and All other Charges)
Sats-Tech.... Trusted name of this field
மேலதிக விபரங்களுக்கு:
SATS - TECH ENGINEERS
M/S National Video Centre,
182,k.k.s Road (Near Kulapity Church),
Kokuvil.
PHONE: 0777710785
(சி-696)

ஐரோப்பிய நாட்டில் உயர்கல்வி
இந்த அரிய வாய்ப்பு - இன்னும் இருவருக்கு மட்டுமே.
மேற்படி நாட்டில் கல்வி கற்பதற்கான பயண ஒழுங்குகள் செய்து தரப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகொள்ளவேண்டிய
தொலைபேசி இலக்கம்:- 01-382960, 066-33783.
(சி-697)

## நாடும் நடப்பும்

ஊடகத்துறையை ஜனாதிபதி கையேற்கவேண்டுமென வலியுறுத்து. -செய்தி-



# ஜூன் மாதத்துக்கு முன்னர் அதிகாரப் பகிர்வுத் திட்டம் !

## சமர்ப்பிக்க வேண்டுமென ஜப்பான் வலியுறுத்து

(ரோக்கியோ)

எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னதாக இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான மாதிரி அதிகாரப்பகிர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் ஹெக்கோனில் நடைபெற்ற பேச்சுக்களின்போது, அரச மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளிடம், ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி இதனை வலியுறுத்தியிருந்தார்.

ஜூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னதாக இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் அதிகாரப் பகிர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கையையும் இருதரப்பும்- ஜப்பானுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். அதனைப் பொறுத்தே இலங்கைக்கான உதவிகள் வழங்கப்படுவது குறித்த முடிவு எடுக்கப்படும்.

ஹெக்கோனில் நடத்தப்பட்ட முதலாம் நாள் பேச்சுக்களில் புரிந்துணர்வு உடன்படிக்கையை உறுதிப்படுத்த அரச தரப்பும் - புலிகள் தரப்பும் எட்டியமுடிவுகள் முக்கியமானவை. ஆனால், இவை போதுமானவையல்ல என்றும் தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.

கடலில் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கும், நெருக்கடிகள் தோன்றாமல் இருப்பதற்கும் முதலாவது நாள் பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகள் முக்கியமானவை.

ஆனால், இவை மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், ஜனநாயகத்தைப் பேணுவதற்கும் போதுமான வையல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



## சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. மாத இறுதிக்குள் இணக்கம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும்- ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி குறித்த பேச்சுக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. ஜனாதிபதி மாளிகையில் நடந்த இந்தப் பேச்சுக்களில், சுதந்திரக்கட்சி சார்பில் அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவும், ஜே.வி.பி. சார்பில் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவும் பங்குபற்றியது.

இந்தக் கூட்டத்தில் இம்மாத இறுதிக்குள் இருகட்சிகளினதும் இணைப்புக் குறித்து பொது இணக்கப்பாட்டை உருவாக்குவது தொடர்பாக விரிவாகப் பேசப்பட்டதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனுக்குச் சென்றிருப்பதால் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவில்லை.

## படையினர் வசமிருந்த வீடு ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு- காங்கேசந்துறை வீதி, அறிவியல் கழகத்தில் மூன்று வீடுகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களில் ஒன்று அகற்றப்பட்டு வீடு - உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏனைய இரண்டு வீடுகளின் உரிமையாளர்களும் வெளிநாட்டில் வசித்து வருவதால், அந்த வீடுகளைச் சுற்றி முட்கம்பிகள் அடித்து, நிலப்பதுங்கு குழிகள் வெட்டி முகாம் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

# அரசாங்கத்தை மிரட்டினால் வாலை வெட்டிவிடுவோம் !

## முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.காவுக்கு அமைச்சர்கள் எச்சரிக்கை

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுத்து மிரட்டுவதாக இரு அமைச்சர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இந்த இரண்டு கட்சிகளும், அரசாங்கத்தை மிரட்டி வருவதாக அம்பாறையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர்கள் பி.தயாரட்னவும், ராஜித சேனாரட்னவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், ஐ.தே.மு. அரசில் வால் - தலையைக் கட்டுப்படுத்துவதுபோல, முஸ்லிம் காங்கிரஸ் நடந்துகொள்ள முற்பட்டால், வாலை வெட்டிவிடுவோம் என்றும் இவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அத்துடன், கிழக்கில் ஐ.தே.கவுக்கு- முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தான் ஆதரவு கிடைத்ததுபோன்று கருதிக்கொண்டு இருப்பதாகவும், ஆனால் உண்மை அதுவல்ல என்றும் அமைச்சர்கள் தயாரட்னவும், ராஜித சேனாரட்னவும் தெரிவித்தனர்.

அரசாங்கத்தில் இணைந்துள்ள கட்சிகளை ஐ.தே.க. அமைச்சர்கள் நேரடியாக விமர்சனம் செய்திருப்பது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

### கண்டெடுக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கை நிலைப்பாடு சில தினங்களில்

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதல் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு சில தினங்களில் வெளியிடப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு நேரத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# மீண்டும் வன்முறைக்கு ஜே.வி.பி திட்டமிடுகின்றது!

## பத்தேகம சமித்த தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பி. மீண்டும் வன்செயலிலும், பயங்கரவாதச் செயல்களிலும், ஈடுபடுவதற்கு முயற்சி செய்வதாக- லங்கா சமசமாசக் கட்சியின் பிரமுகரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பத்தேகம சமித்த தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருப்பதாவது,

அண்மையில் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கருத்து வெளியிட்டிருந்தார். இது இவர்கள் மீண்டும் 1988/89 இல் ஏற்படுத்திய பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்த முனைவதையே காட்டுகிறது.

ஜனநாயகம் என்ற போர்வையில் ஜே.வி.பி. மீண்டும் பயங்கரவாத வன்செயல்களில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டு வருகின்றது.

மக்கள்- ஜே.வி.பி. விடயத்தில் மிகவும் அவதானமாக இருந்துகொள்ளவேண்டும். இல்லையேல் மக்களும், நாடும் பெரும் ஆபத்துக்குள் மாட்டிக்கொள்ள வேண்டியநிலை ஏற்படலாம் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

## மரணதண்டனை எதிர்ப்பு அணியில் பிரதமர் ரணிலின் மனைவியும்!

இலங்கையில் மரணதண்டனை நடைமுறை மீண்டும் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அணியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மனைவியும் இடம்பெற்றுள்ளார்.

மரணதண்டனை அமுலாக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவருகின்றது. இந்த மகஜரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவும் கையெழுத்திட்டார்.

இந்தமகஜரில் ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரியான சுனித்திரா பண்டாரநாயக்கவும் ஒப்பமிட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக கப்பல் உரிமையாளர் போர்க்கொடி

(கொழும்பு)

மாஸ்ரர் டைவர்ஸ் (Master divers) என்ற சர்வதேச கப்பல் நிறுவனத்தை- இலங்கைக்குக் கொண்டுவர முனையும் - துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீமின் முயற்சிக்கு- உள்ளூர்க் கப்பல் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உள்ளூர் கப்பல் உரிமையாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்நாட்டு, வெளிநாட்டுப் போக்குவரத்துக்கு உள்ளூரில் உள்ள கப்பல்களே போதுமான வையாகும். இந்தநிலையில், வெளிநாட்டு நிறுவனங்களை இங்கு கொண்டுவருவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் முயற்சியில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அமைச்சருக்கும், இத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளோம்.

அமைச்சர் ஹக்கீம் வர்த்தமானி மூலம் அறிவித்தலை விடுக்கும் முயற்சியைக் கைவிடவேண்டும்.

இல்லையேல், அவருக்கு எதிராக விரைவில் நீதிமன்றங்கள் வழியாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் உள்ளூர் கப்பல் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

## ஈராக் மீதான தாக்குதல் - யாழ். நகரில் உருவாக்கிய எரிபொருள் தட்டுப்பாடு...!








# கட்டடங்களைப் போன்றே மனிதர்களின் வாழ்க்கையைப் புனரமைக்க வேண்டும்

## சட்ட ஆலோசனை நிகழ்வில் தென்பகுதி சட்டத்தரணி

(வடமராட்சி)

வட-கிழக்கில் யுத்தத்தினால் மனித அழிவுகளும், சொத்து அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்வது போல, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கையையும் புனர்நிர்மாணம் செய்யவேண்டும். இந்த புனர்நிர்மாணத்திற்கு உதவவே இந்தச் சட்டமன்றம் செயல்பட்டு வருகிறது என்று வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இலவசச் சட்ட ஆலோசனைக் கருத்தரங்கில் உரையாற்றிய தென்பகுதிச் சட்டத்தரணி நிசங்க பெரேரா தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

காணாமற்போன ஒருவருக்கு மரண அத்தாட்சிப்பத்திரம் ஒரு வருடத்தின் பின்னரே கிடைக்கும். ஆனால், இப்போது 3 மாதத்திற்குள் எடுக்க முடியும். இதுபோன்ற சட்ட நடவடிக்கைகளில் உதவிபுரிவது எமது கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அடுத்து அங்கு உரை நிகழ்த்திய சட்டத்தரணி அன்னபாக்கியம் சிதம்பரப்பிள்ளை கூறியதாவது,

பல ஆண்டுகளுக்கு முன்பே சட்ட உதவி மன்றம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், இப்பொழுதுதான் வடக்கு-கிழக்கு மக்களுக்குச் சட்ட உதவி மன்றத்தின் நடவடிக்கைகளை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது எனத் தெரிவித்தார். (17)

# இலங்கை அணி தோல்வி; அதிர்ச்சியால் இருவர் மரணம்!

(கொழும்பு)

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கையணி அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து அதிர்ச்சியால் இருவர் மரணமடைந்தனர்.

இச்சம்பவம் புஹுல்வல்ல- கிரிந்த என்ற இடத்தில் இடம்பெற்றது. உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் இலங்கையணி தோல்வியடைந்த அதிர்ச்சியில், இளைஞர் ஒருவர் மரணமானார். இவர் சனத் ஜெயசூரியவின் தீவிரமான ரசிகராவார்.

இந்த இளைஞரின் மரணச் செய்தியைக் கேட்ட அவரது தந்தையும் அதிர்ச்சியால் மரணமானார் எனத் தெரியவருகின்றது.

# கரவெட்டி பிரதேசத்தில் சீருடை விநியோகம்

(நவிண்டில்)

கரவெட்டிப் பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த 35 கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள மாணவர்களுக்கான சீருடைத்துணிகள்- உடுப்பிட்டி, நெல்லியடி, கரவெட்டி ஆகிய ப.நோ.கூ.சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள்- கிராம அலுவலர் அலுவலகங்களில் சீருடைக்கான முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டி பிரதேசசெயலர் தெரிவித்துள்ளார்.

# குடாநாட்டில் பெய்துவரும் மழை; சிறுபோக அறுவடை பாதிப்பு !

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பரவலாகப் பெய்துவரும் மழையினால் சிறுபோகப் பயிர் அறுவடைகள் பாதிப்படைந்துள்ளன.

கடந்தவாரம் முதல் சில தினங்களாகத் திடீர் திடீரெனக் குடாநாட்டில் மழைபெய்து வருகின்றது. இதனால் வெங்காயம், புகையிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சிறுபோக அறுவடைகள் நடைபெற்றுவரும் இந்த மாதத்தில், முன்பு ஒருபோதும் இல்லாதவகையில் மழைபெய்ய ஆரம்பித்துள்ளதால்- வெங்காயப் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் - அரைவாசி வெங்காயம் போர் வைக்கப்பட்டும், எஞ்சியவற்றை அறுவடை செய்ய முடியாதநிலையிலும் இருக்கின்றனர். போர் வைக்கப்பட்ட வெங்காயங்கள் மழையில் நனைந்து அவற்றினைக் கட்டிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோல, புகையிலைப் பயிர் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் வெட்டுவதற்குத் தயாராகவிருந்த போதிலும், மழையினால் உலர வைப்பதைக் காரணங்காட்டி- 75 ரூபா, 80 ரூபா கேள்வியிலிருந்த புகையிலை மரத்தினை அரைப் பங்கு விலையில் விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வெங்காயத்தாள் பழுதடைந்தமையால் உரியவிலையில் விற்க முடியாதுள்ளது. இதனால் கொழும்புக்கு ஏற்றும் தரகர்கள் குறைந்த விலைகளில் இவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (ச,சு)

### நிலுவை செலுத்தாத மின்னிணைப்புக்கள் துண்டிப்பு

(நவிண்டில்)

ரூபா 1500 இற்கு மேற்பட்ட நிலுவையைக்கொண்ட மின்சார பாவனையாளர்களின் மின்னிணைப்புக்கள் மின்சாரசபையினரால் துண்டிக்கப்பட்டு வருகிறது.

இதனையடுத்து மின்சாரப் பாவனையாளர்கள் நிலுவைப் பணத்தினை வங்கிகள் மூலமாகச் செலுத்தி வருகின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது. (116)





குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக வந்துள்ள அமெரிக்க குழுவினர் தமது அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்துள்ளனர். அலுவலகத்துக்குப் பொருட்களை கொண்டுவந்து இறக்கும் கண்ணிவெடி அகற்றும் குழுவினரைப் படங்களில் காணலாம்.

# மட்டக்களப்பு - வாழைச்சேனை ரயில் சேவை அடுத்த மாதம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை ரயில் சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

தற்போது வாழைச்சேனைவரை இடம்பெறும் ரயில் சேவைகள், அடுத்த மாதம் முதல் மட்டக்களப்பு வரை விஸ்தரிக்கப்படும். 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மட்டக்களப்புக்கு ரயில் சேவைகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை - மட்டக்களப்பு ரயில் பாதை திருத்தப்பணிகளுக்கு 17 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 10 கோடி ரூபாவை நோர்வே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தென்மராட்சியில் திருட்டு அதிகரிப்பு

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

அண்மைக்காலமாகக் குறைவடைந்திருந்த திருட்டுச் சம்பவங்கள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாக- சாவகச்சேரி, மீசாலை, அல்லாரை, கல்வயல், மட்டுவில் ஆகிய பகுதிகளிலேயே இத்திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

### பட்டம் வழங்கி கௌரவிப்பு

(கோண்டாவில்)

புன்னாலைக்கட்டுவன்- ஈவினை மீனாட்சியம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தின்போது, தொடர்சொற்பொழிவாற்றிய சைவசித்தாந்த பண்டிதர் காரை.கு.சிவராஜ சர்மாவுக்கு "சைவநெறிச் செல்வர்" எனும் பட்டமும், சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசனுக்கு "அருள்நெறிச் செல்வர்" எனும் பட்டமும் - பண்டிதர் சிவஸ்ரீ.கு.ஜெகதீஸ்வரக்குருக்களால் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. (78)

### பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(நவிண்டில்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்ட கல்லூரிகளின் விபரங்கள் வருமாறு-

16 வயதுப் பிரிவில் - 1 ஆம் இடம்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், 2 ஆம் இடம்- கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை, 3 ஆம் இடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி.

18 வயதுப் பிரிவில்- 1 ஆம் இடம்- சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, 2 ஆம் இடம்- தேவரையாளி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் (116)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மருதனார்மட கல்விப் பணிப்பாளர் திருமதி இருதயநாதன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.இரவீந்திரா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் மற்றும் கல்லூரி அதிபர் திருமதி பசுபதிப்பிள்ளை, முன்னாள் அதிபர் திருமதி தியாகராஜா ஆகியோரையும் படத்தில் காணலாம்.


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் :கி.புராதனி
முகவரி:உரும்பிராய் மேற்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------------
பெற்றார் ஒப்பம்

# பரதநாட்டியத்தைப் பயில்வோரும் இரசிப்போரும் பெருகிவருகின்றனர்

கேள்வி: பரதநாட்டியக் கலை இன்னமும் ஒரு மரபுசார்ந்த கலையாகக் கைக்கொள்ளப்படுகிறதா? அல்லது நவீனமுறைகள் பின்பற்றப்படுகிறதா?

பதில்: பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே மரபு எனலாம். அதாவது, குறிப்பிட்ட ஒரு பிரதேசத்திலே, குறிப்பிட்ட இனக்குழுமத்தினிடையே நீண்ட காலமாகப் பயிலப்பட்டுப் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வந்த ஆடல் முறைமைகளை அந்தப் பிரதேசத்தினுடைய/இனக் குழுமத்தினுடைய ஆடல்மரபு எனக் குறிப்பிடலாம். இந்தியாவின் தெற்குப் பிரதேசத்திலே- குறிப்பாகத் தமிழ்நாட்டிலும், இலங்கையில் தமிழர் வாழ்பிரதேசங்களிலும் பேணப்பட்டுவந்த ஆடல் முறைமையாகப் பரதநாட்டியம் மிளிர்கின்றது. இது உயர்ந்த செந்நெறிப்பட்ட இலக்கணம் வகுக்கப்பட்ட உயர் மரபு ஆடலாக சாஸ்திரீய ஆடல் எனப் போற்றப்படுகின்றது. இம்மரபு காலம் காலமாகப் பேணப்பட்டு வருவதுடன், இவற்றிற்குப் பல அறிஞர்கள் தத்தம் பங்களிப்பைச் செய்து மெருகூட்டி, அதற்கு மதிப்பும், அங்கீகாரமும் அளித்துவந்தமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தவகையில், அறிஞர்கள் ஒவ்வொருவரும் தமது கற்பனை உணர்வுகளுக்கமைய அடிப்படை மரபுகளை வைத்துக்கொண்டு பல உத்திகளைக்கையாண்டனர். இதனடிப்படையில் பரத நாட்டியக் கலையில் பல பாணிகள் உருவாகின. உதாரணமாக- பந்தனை நல்லூர் பாணி, வழுவூர் பாணி போன்றவற்றைக் குறிப்பிட



லாம். கலைஞரின் ஆற்றல், கற்பனாசக்தி, கலைஞானம் என்பவற்றுக்கமைய இப்பாணிகள் அமைந்திருந்தன. ஆனால், அடிப்படை அம்சங்கள் மாறாத்தன்மையைக் கொண்டிருந்தன. இப்பாணிகளைப் பயின்ற பலர், தாம்- தமது மாணவர்களுக்கு இதனைக் கற்பிக்கையில்- தமது கலைத்துவத்திற்கேற்ப நவீன உத்திகளைப் புகுததினாலும், அடிப்படை அம்சங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எனவே, காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படினும், மரபுத் தொடாச்சியிலே மாறுபடாத ஓர் அடிப்படையம்சம் இழையோடி வருகின்ற தன்மையைக் காணலாம்.

கேள்வி: யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் நடனக்கலையின் வளர்ச்சி எவ்வாறு இருக்கிறது?

பதில்: இன்றையநிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்களில் குடும்பத்தில் ஒருவரேனும் பரதநாட்டியத்தைக் கற்றவராகத் திகழ்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலையே யாழப்பாணத்தில் பரதக்கலையின் வளர்ச்சியின் உன்னதத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. பாடசாலை ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்விவரை பரதநாட்டியம் கற்பிக்கப்படுவதுடன், உயாகல்வியில் பரீட்சைக்குரியபாடமாகவும் புகுத்தப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து பல்கலைக்கழக மட்டத்திலும் இக்கலை பயிலப்பட்டு- நுண்கலைமாணிப் பட்டப்படிப்பு, முதுதத்துவமாணி என ஆராய்ச்சி அடிப்படையிலும் பரதக்கலை வளர்ச்சி கண்டுள்ளது. அத்துடன் கல்வியியற்கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை என அனைத்து கல்விசார் நிலையங்களிலும், வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் பரீட்சைகளிலும் பரதநாட்டியம் ஒரு பாடநெறியாகப் பரிணமித்துள்ளது. பல மாணவர்கள் இக்கலையினைத் தனியார் நிறுவனங்களினூடாகவும் பயின்று அரங்கேற்றங்களையும் நிகழ்த்து கின்றனர். இதைத்தவிரப் பாடசாலை விழாக்கள், தமிழ்த்தினப்போட்டிகள், முத்தமிழ் விழாக்கள் போன்ற அனைத்திலும் பரத நாட்டிய நிகழ்வுகள் முக்கிய கலைநிகழ்வாக இடம் பெற்று வருகின்றது. வளரும் சந்ததியினர்

> **திருமதி. கிருஷாந்தி இரவீந்திரா (M.Phil in Dance)**
> **சிரேஷ்ட விரிவுரையாளர்,**
> **இராமநாதன் நுண்கலைக் கழகம்,**
> **நடனத்துறை,**
> **யாழ்.பல்கலைக்கழகம்.**

ஒவ்வொருவரும் இக்கலையினைப் பயிலும்நிலை காணப்படுவதனையும், இக்கலையினை இரசிப்போரின் எண்ணிக்கையும், இரசனையும் அதிகரித்து வருவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

கேள்வி: யாழ்ப் பாணத்தைப் பொறுத் தளவில் நடனக் கலை பெண் களுக் கேயுரியது என்ற நிலை இருந்து வருகிறது. அந்தக் கலையை ஆண் களும் கற்கலாம் எனற வகையில் உங்களுடைய விளக்கம்.

பதில்: யாழ்ப்பாணத்தில் தற்கால நிலையில் நடனக் கலை பயில்பவர்களிலும், பயிற்றுவிப்பவர்களிலும் மிகப் பெரும்பான்மையானவர்கள் பெண்களே யாவர். ஆனால், இதற்கு முன்னைய தலைமுறையினரை எடுத்துக்கொண்டால், முக்கியமாகப் பரத நாட்டிய மறுமலர்ச்சியை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய பெருங்கலைஞர்களாக ஆண் கலைஞர்களே செயற்பட்டிருக் கிறார்கள். இந்தவகையில்- கலைச் செல்வர் ஏரம்பு சுப்பையா, கீதாஞ்சலி வி.கே. நல்லையா, வி.இரா ஜரத்தினம், தொம்முக்குட்டி ஆசிரியர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அத்துடன், இன்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இயலிசைவாரிதி வீரமணி ஐயா அவர்களும் பரதக்கலை வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய மூத்த ஆண் கலைஞர் ஆவார். அத்துடன், இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறிய ஆண்கலைஞர்களும் இருக்கிறார்கள். தற்போதும் பரதககலையை ஆண்கலைஞர்கள் பயில்கின்றார்கள். எனவே, பரதக்கலையை ஆண்கலைஞர்கள் கற்கலாமா? என்ற கேள்விக்கே இடமில்லை.

கேள்வி: நடனக்கலை பயில்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அதிலிருந்து விலகி வருகிறார்கள் என்று கூறப்படுவது பற்றி...

பதில்: நடனக்கலை பயில்பவர்கள் தொடர்ச்சியாக இக்கலையில் ஈடுபடமுடியாமைக்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். மேற்படிப்பினைத் தொடரும் ஒருவர் வேறோர் துறையில் தனது கற்கையில் ஈடுபடும்வேளையில், நடனக்கலையில் தொடர்ந்து ஈடுபடமுடியாமல் போகலாம்.



சில பெண்கள் திருமணமான பின்னர், இக்கலையைத் தொடர்ந்து ஆற்றுகை செய்வதனைக் குடும்பத்துச் சூழ்நிலை இடந்தராமையும் ஒரு காரணமாகும். எனினும், தற்போது யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற நடனக்கல்வி வளர்ச்சிப்போக்கிலும், அதற்கு அளித்திருக்கின்ற உயர் கல்வி அந்தஸ்தினூடாக ஏற்பட்டிருக்கும் சமூகமாற்றத்தின் மூலமாகவும், பரதக்கலையைப் பயின்றவர்கள் தொடர்ச்சியாக இக்கலையில் ஈடுபடாமலிருப்பது அரிதாகக் காணப்படுகின்றது.

பரதநாட்டியக் கலையில் ஈடுபடுபவர்களை இரண்டு பிரிவாக நோக்கலாம்.

* பரதநாட்டியத்தை அரங்கிலே ஆற்றுகை செய்பவர்.
* பரதநாட்டியத்தைப் பயிற்றுவிப்பவர்.

இங்கு பெரும்பாலானவர்கள் நடன ஆற்றுகையைத் தொடர்ந்து செய்ய முடியாமல் இருந்தாலும், நடனத்தைப் பயிற்றுவித்துத் தமது மாணவர்களினூடாகப் பரதநாட்டியத்தை அளிக்கை செய்கிறார்கள். பரதநாட்டியத்தைப் பொறுத்தவரையில் உடல்வனப்பைப் பேணுவதும், தொடர்ச்சியான பயிற்சிகளை மேற்கொள்வதும் பரதக்கலை ஆற்றுகையில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றது. எனவே எவரொருவர் இதனை பேணுகின்றாரோ- அவர் பரதநாட்டிய ஆற்றுகையைத் தொடர்ச்சியாகச் செய்யக்கூடியவராக இருக்கின்றார்.

கேள்வி: பரதநாட்டியத்தில் உங்களது ஈடுபாட்டையும், நீங்கள் பெற்ற தகைமைகளையும் பற்றி...

பதில்: எனது இரண்டு வயதிலேயே திரைப்படங்களில் வரும் நடனங்களைப் பார்த்து நான் நடனமாடியதாக எனது தந்தையார் கூறுவார். எனது தந்தையார்- மணி ஐயர் என்று அழைக்கப்படும் காலம் சென்ற தம்பிரான் சுவாமிகளிடம் நடனம் பயின்றவர். எனவே, சிறுவயதில் சிறு சிறு அபிநயப்பாடல்களுக்கு எனக்கு நடனத்தைக் கற்றுத்தந்தார். நான் முறைப்படி நடனக்கலையைக் கற்கவேண்டுமென்ற ஆவல் எனது தந்தையாருக்கு எழுந்தது. அவரின் ஆசையைப் பூர்த்தி செய்கின்றது போல் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. திருமண வைபவம் ஒன்றிற்கு எனது பெற்றோருடன் சென்றிருந்த நான், அங்கு இசைத்த நாதஸ்வர இசைக்கு நடனமாட ஆரம்பித்துவிட்டேன். எனது ஆடலைக் கண்ட நாதஸ்வர வித்துவான்- எனது நடன ஆர்வத்தைக் கண்டு, என்னை கலைஞர் ஏரம்பு சுப்பையா அவர்களிடம் நடனம் கற்பதற்குச் சேர்ப்பித்தார். எனது குரு கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களிடம் தொடர்ந்து ஏழாண்டுகள் நடனம் பயின்றதன் பின் -1970 ஆம் ஆண்டு எனது அரங்கேற்றம் வீரசிங்கம் மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வருகைதந்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் நாட்டிய கலாஜோதி என்ற பட்டம் எனக்கு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியா சென்று நான்- குரு பத்மஸ்ரீ. அடையாறு. கே.லக்ஷ்மனணிடம் நடனம் பயின்று **Dimploma In Bharathanatyam And Nattuvangam** என்ற பட்டத்தையும் பெற்றதோடு, பல நடன நிகழ்வுகளிலும் பங்குகொண்டேன். மேலும்- சாந்தா தனஞ்ஜயன் அவர்களிடமும் சிறிதுகாலம் பயின்றேன். அதன் பின்னர் 1973 ஆம் ஆண்டில் நடனம் முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. இராமநாதன் நுண்கலைக்கழகம் தனியார் நிறுவனமாக இருந்துபோது, அவ்வேளையில் அதன் முதல் ஆசிரியராக நான் நியமனம் பெற்றேன். பின்னர், யாழ். பல்கலைக்கழகத்தினால் இந்நிறுவனம் பொறுப்பேற்கப்பட்டதுடன் நடன விரிவுரையாளராகத் தொடர்ந்து பணியாற்றுகின்றேன். இக்காலப் பகுதியில் "யாழ்ப்பாண நாட்டிய மரபு" எனும் ஆயவினை மேற்கொண்டு முதுதத்துவமாணிப் பட்டத்தினை யும் பெற்றுளளேன். அகில இலங்கை இலக்கியப் பேரவையால் நடாத்தப்பட்ட நடனப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றேன். அனைத்துலக நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் நடனம் ஆற்றுகை செய்துள்ளேன். எனது கணவர் இரவீந்திரா அவர்களும் கலையில் ஈடுபாடுள்ளவர். நாட்டிய கலா கேந்திரா நிறுவனத்தின் கலை நிகழ்ச்சி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது- நான், எனது மாணவிகளை நடனம் ஆற்றுகை செய்துள்ளேன். இரவீந்திரா அவர்கள் இராமசரித்திரத்தில் நவரசங்களை வெளிப்படுத்தும் காட்சிகளை ஆற்றுகை செய்தார். இந்நிகழ்ச்சிக்குத் திருமதி சாந்தினி. சிவநேசன் நட்டுவாங்கம் செய்தது குறிப்பிடத்தக்கது.

எனனுடைய கலை வளர்ச்சியடைவதற்கு எல்லாம் வல்ல ஆடல் வல்லானின் கிருபையால்- தந்தை சேனாதிராஜா, தாயார் ராஜமனோரஞ்சிதம் எனக்குப் பெற்றோர்களாக அமைந்தது பெரும்பாக்கியம். எனது கணவர் இரவீந்திரா- எனக்குத் தொடர்ந்து இப்பணியைச் செய்வதற்கு ஆதரவும், ஊக்கமும் தந்து கலையை வளர்க்க உறுதுணையாக அமைந்தது எல்லாம் வல்ல, ஆண்டவனின் செயலாகும். என்னுடைய பிள்ளைகளும் கலைப்பாதையில் ஈடுபடுவதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**நேர்காணல்:**
**உஷா,கலாஙந்தி**



## நெருஞ்சி முள்

**இரா.காளீஸ்வரி**

**உயிரைக் கொல்லும்**
**சிகரெட் நாற்றமெடுத்த**
**வாய்**

**நூலாம் படையாய்**
**பிசுபிசுத்த**
**அக்குள்**

**முள் கம்பியாய்**
**குத்தும்**
**மீசை**

**ஒருபோதும் நினைத்ததில்லை**
**சிரமங்களாய்**

**என்**
**அவஸ்தை நாட்களில்**
**முணுமுணுத்து,**
**எரிச்சல்பட்டு.....**
**'சேலை தோச்சியா '**

**'குளிச்சியா'**
**'படத்துக்குப் போகாதே'**
**என்பது மட்டும்**
**நெருஞ்சி முள்ளாய்.**



## பொம்மைக் கேக்

**தேவையான பொருட்கள்-**
**கேக், ஐசிங் சுகர், கலரிங், சுடுநீர், மாஜரின்.**

### செய்முறை:

பொம்மை கேக்கில் ஐசிங் செய்வதாயின் முதலில் வளையாததும், உறுதியானதுமானதொரு **Board** இல் கேக்கினைக் கவிழ்த்துப் போடவும். பின் இரண்டு ஓரளவான வட்டமாக வெட்டி, ஒன்றின் மேல் ஒன்றாக உயர்த்தி வைக்கவும். பின் காலைக் கழற்றிய பொம்மையை அதனுள வைத்து அமர்த்தியபின், ஒரு சட்டை அதாவது, ஒரு பாவாடை வடிவில் மேற்பகுதி ஒடுக்கமாகவும், கீழ்ப் பகுதி அகலமாகவும் வரும் வண்ணமாகச் சீவியெடுக்கவும். பின்னர் சுடுநீர் கொண்டு **Smoo thing Spoon** ஆல் **Smooth** செய்யவும். அதன் பின், எல்லாப் பகுதிகளுக்கும் கிறீமாக அடித்த மாஜரீனைப் பூசிக்கொள் ளவும். பின் செங்குத்தாக ஆறு பகுதிகளாகப் பிரித்து **Soft butter Icing Pink** கலரினால் குழைத்து மாறி மாறி **Star** போடவும். **Soft butter Icing** வெள்ளைக் கலரினால் இடையிடையே **Star** நொசிலால்போடவும். பொம்மையின் உடலிற்கும் சடடை மாதிரி **Soft butter Icing Pink** கலரால் **Star** போடவும்.நடுவில் தெறிவைக்கலாம். விரும்பினால் **Pachment** குழைத்து **Hand bag** செய்து போட்டுவிடலாம். பொம்மையின் கையில் சிறிய பூக்கள் செய்து அதனைச் செண்டாகச் செய்து, பொம்மையின் கையில் வைத்திருக்கக் கொடுக்கலாம். இக்கேக் ஐசிங்கானது பெண் பிள்ளைகளுக்கு முதலாவது பிறந்ததினத்திற்குச் செய்வதாகும்.



# பெண்ணாகி வந்த பூங்காற்று

### பெண்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்கள்

பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், உடல் ரீதியான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவை பெண்களுக்குப் பெரும் மனச்சோர்வை ஏற்படுத்துகின்றன. உலகின் மொத்தப் பெண்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கினர் தமது வாழ்வில் ஒருமுறையாவது பாலியல் வன்முறைக்குள்ளாகின்றனர் (குடும்ப அங்கத்தவராலோ அல்லது வெளியாராலோ) என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அநேக சிறிய குழந்தைகள் வீட்டிலிருத்தல், சமூக அந்தஸ்து குறைவாக இருத்தல், வேலைக்குச் செல்ல முடியாதநிலை, தாயின் அன்பையும், பாதுகாப்பையும் சிறிய வயதிலேயே இழந்துவிடல், சமூகப் பாகுபாடுகளினால் பாதிக்கப்படல், சுயகணிப்புக் குறைவாக இருத்தல், தேவைகள் குறைவாக இருத்தல் போன்ற விடயங்களும் பெண்களை மன அழுத்தத்திற்கு உட்படுத்தி மனச்சோர்வுக்கும், விரக்திக்கும் இட்டுச்செல்லலாம்.

கடந்த இருபது வருடகாலப் போர்ச்சூழலில் எமது வாழ்வில் இடப்பெயர்வு, இழப்பு, எதிர்கால நிச்சயமின்மை, அழிவுகள், காயங்கள், சித்திரவதைகள், கொலைகள், கொள்கைகள் போன்ற விடயங்கள் மிக முக்கிய கூறுகளாகிவிட்டன. பெண்களும், குழந்தைகளும், முதியோர்களுமே இத்தகைய நிலைமைகளால் அதிகம் மனத்தாக்கத்துக்கு உட்படுவோராக உள்ளனர். அதிலும் போரினால் கணவனை இழந்த விதவைகள், காணமற்போனோரின் குடும்ப அங்கத்தவராயுள்ள பெண்கள் ஆகியோர் அதிகளவு பாதிக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடும்.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் பருவத்திலும், குழந்தைப் பேற்றின்போதும் ஏற்படும் ஓமோன் சுரப்பு மாற்றங்களும் அவர்களைத் தாக்குகின்றன. இக்காலத்தில் அவர்கள் இலகுவில் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அதீத மனச்சோர்வுக்கு உட்படும் பெண்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். எமது நாட்டில் அலரிவிதைப் பாவனை வேகமாக அதிகரித்து வருகிறது. உலகம் முழுவதையும் எடுத்துநோக்கினால் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை ஆண்களிலே அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் கூடுதலாகப் பெண்களாகவே உள்ளனர். தமது நேரான உணர்வுகளையும், மறையான உணர்வுகளையும் ஏற்றுக்கொண்டு வெளிப்படுத்தும் பண்பும் பெண்களிடமே அதிகம் காணப்படுகிறது.

உலகம் முழுவதிலும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நிலைமைகளில் ஆண்களுக்குச் சமமாக உயர்ந்தெழப் பெண்கள் கடும்முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். தமக்கான அந்த உரிமையை அவர்கள் தேடுகிறார்கள். இந்தக் கோரிக்கை மிகநியாயமானது என்பதை இன்று உலகநாடுகள் பலவும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதனை அக்கறையுடன் கவனிக்கவேண்டிய பொறுப்பு எமக்கும் உள்ளது.

### பெண்களின் ஆளுமை விருத்தி

பெண்களின்நிலை சமூகத்தில் உயரவேண்டுமானால், அவர்களது ஆளுமையை முழுமையாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவை முதன்மைப்படுகிறது.

ஆளுமை என்றால் என்ன? இது மிகக்கடுமையான வினா! தமக்கிடையே சிலசில பொதுப்பண்புகளைக் கொண்டிருந்தாலும்கூட, இதுவரையில் ஏறத்தாழ, இருபத்து நான்கு வெவ்வேறு ஆளுமைக் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. உளவியலில் இது இன்று ஒரு தனிப்பட்ட குறையாகவே வளர்ந்து வருகிறது. ஆளுமை பற்றி ஏற்கனவே அறியப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கற்கவே ஒருவருக்கு நீண்டகாலம் தேவைப்படும். அதே சமயத்தில் அதுபற்றி இன்னும் அறியப்படாத அல்லது தெளிவுபடுத்தப்படாத பகுதிகள் நிறைய இருக்கின்றன.

ஆளுமை பற்றிய உளவியலின் பிரிவு- ஆளுமையியல் என அழைக்கப்படுகிறது. இது மனிதவாழ்வு பற்றியும், வாழ்வின் பாதையைப் பாதிக்கும் காரணிகள் பற்றியும் மற்றும் தனிமனித ஆளுமை வேறுபாடுகள், ஆளுமை வகைகள் பற்றியும் ஆய்வுசெய்கிறது.

**கோகிலா மகேந்திரன்**

பொதுவான ஆளுமை என்பது ஒருவரின் ஆற்றல்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள், கொள்கைகள், பழக்கவழக்கங்கள், உணர்ச்சித் தூண்டற்பேறுகள், மனநிலைகள், அவரிடத்



திற்செயற்படும் சக்தி மட்டங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும்.

"பேர்சனாலிற்றி" என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிக்குரிய அடிவேரை "கோர்டன் ஆல்போர்ட்" என்ற விஞ்ஞானி தேடினார். புராதன லத்தீன் மொழியில் "பேர்சோனா" என்ற சொல் பல அர்த்தங்களைத் தரும் சொல்லாகப் பாவிக்கப்பட்டு வந்தது.

1) ஒருவர் மற்றவர் முன்னே தோன்றும் நிலை.
2) ஒருவர் தமது வாழ்வில் எடுக்கும் பாத்திரம்.
3) ஒருவரை அவரது தொழிலுக்குப் பொருத்தமுடையவராக்கும் அவரது தகைமைகளின் கூட்டு மொத்தம்.
4) ஒருவரது தனிப்பட்ட முத்திரைகள்.

ஆகவே ஒரு தனிமனிதனுடைய உண்மைத் தன்மைக்கும், அவனது வெளித்தோற்றத்துக்குமிடையேயுள்ள - இரண்டகத் தன்மையைக் குறிப்பதாகவே இச்சொல் மெதுவாக வளர்ந்து வந்துள்ளநிலையைப் பார்க்கிறோம். உண்மையில்- வெளியே தோற்றமளிக்கின்ற, இந்த ஒவ்வொரு மனிதருக்கும் உள்ளே- வெளியே தெரியாத - தனிப்பட்ட- சில சமயங்களில் முற்றிலும் வித்தியாசமான - ஒரு மனிதர் இருக்கிறார். இந்த அகமனிதர், வெளியே தெரியும் மனிதரைவிட அதிகளவு உண்மையானவர், அதிகளவு நேர்மையானவர். பெண்கள் அனைவரும் தமக்குள்ளேயுள்ள இந்த அக மனுஷியைக் கண்டுகொள்ளவேண்டும்.

ஆளுமைக் கொள்கைகள் அனைத்தையும் மூன்று பெரிய பிரிவுகளில் அடக்கலாம்.

1) நடத்தைக் கொள்கைகள்.
2) உளப்பகுப்பாய்வுக் கொள்கைகள்.
3) மனிதம்சார் கொள்கைகள்.

அக, புற யதார்த்த நிலைமைகளே மனிதஆளுமையை உருவாக்குகின்றன என்று 'சிக்மண்ட் புரோயிட்' என்ற உளவியல் அறிஞர் கருதினார். பாலியல் உந்தல், வன்முறை உந்தல், இரக்கம் கலைதல் ஆகிய மனிதத் தேவைகளே மனித ஆளுமையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளாக இருப்பதை அவர் பார்த்தார். மனித ஆளுமையைத் தீர்மானிக்கும் முக்கிய உந்தல் எதுவென்ற கருத்தில்- உளவியல் அறிஞர்கள் ஆளுக்காள் வேறுபட்டனர். பாலியல் உந்தல், வன்முறை உந்தல் ஆகியவற்றோடு, நல்லமுறையில் அமையும் மனித உறவுத்தேவையும்- மனித ஆளுமையை நிர்ணயிப்பதாக 'அன்னா புரோயிட்' கூறினார்.

(தொடரும்...)

# தலைவி நீ தலை நிமிர்...!



தலைவியே! நீ தலைவிதான் என்பதை உணர்ந்துகொண்டு உன் தலைமையில் எதைச் செய்யப்போகிறாய் என்பதையும் தீர்மானித்து விட்டாய். அதை எப்படிச் செய்யப் போகின்றாய்? என்பதுதான் அடுத்த நிலை. அதைத்தான் நீ திட்டமிடவேண்டும். உன் குறிக்கோளை அடைவதற்கு எப்படிச் செயற்படவேண்டும். என்னென்ன செய்ய வேண்டும் என்பதை திட்டமிடவேண்டும். அந்தத்திட்டத்திலேயே உனது வெற்றி தங்கியுள்ளது.

இடம், பொருள், ஏவல் ஆகியவை பார்த்து எதையும் செய்ய வேண்டும் என்பார்கள். உன் திட்டமிடலும் அவ்வாறே அமையவேண்டும்.

உனது குறிக்கோள் அடையக்கூடிய இலக்காகவே தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதை நிர்ணயிக்கும்போதே, இந்த இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைக் கவனித் திருப்பாய். இலக்கை அடையத்தேவையான நிதிவளம், மனித வளம் என்பன உள்ளதா என்பதை கவனத்தில் எடுத்து, அவற்றை வைத்துத் திட்டத்தை அமைக்க வேண்டும்.

உதாரணமாக - ஒரு வாகனத்தை வாங்கி ஏ-9 பாதையூடாக ஓடவிட்டு இலாபமீட்டத் திட்டமிடும்போது, எந்த வாகனத்தை வாங்க நிதிவசதி உள்ளது? என்பதை ஆலோசித்துத் தீர்மானம் எடுக்க வேண்டும். உன்னிடமுள்ள பணத்துடன் எந்தவகையில் பணவுதவி பெற்று அதனை வாங்குவது என்பதை ஆராய்ந்து முடிவுசெய்ய வேண்டும். அதைச் சரியாக மேற்பார்வை செய்து, அதனால் வரும வருமானத்தில் கடனை மீளச்செலுத்தவும், போக்குவரத்து, வாகனப் பராமரிப்பு, ஊழியர்வேதனம் ஆகியவற்றுக்குத் தேவையான பகுதியைச் செலவுசெய்து இலாபத்தை ஈட்டக் கூடிய ஒருவரைத் தெரிவுசெய்து, அதற்கென நியமிக்கமுடியுமா என்பதையும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

இவற்றை முடிவுசெய்தபின், உன்னிடமுள்ள பணத்துடன், குறித்த நிதி நிறுவனத்தின் உதவிபெற்று- பயணிகள் போக்குவரத்துக்கான, நீடித்தபாவனை செய்யக்கூடியதெனப் பலராலும் கூறப்படும் குறித்த வாகனத்தைச் சிறந்த கம்பனி ஒன்றில் வாங்கி, தேர்ந் தெடுத்தவரின் பொறுப்பில்விட்டு, எந்தவகையில் அதைப் பயன்படுத்துவது என்று திட்டமிடல் வேண்டும். எவ்வளவு வருமானம் வரும்? என்ன செலவு வரும்? இலாபம் எவ்வளவு வரும் என்பதை முற்கூட்டியே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவேண்டும்.

நீ- உன் வீட்டில் உனது மகளின் சங்கீத ஞானத்தை வளர்த்து, அவளைச் சிறந்த ஒரு வயலின் மேதையாக்குவது எனத் தீர்மானித்தால், அதை எப்படி நிறைவேற்றுவது என்பதற்கும் திட்டமிட்டே செயற்படவேண்டும்.

அவளை யாரிடம் வயலின் பழகவிட்டால், அவள் தனது சங்கீத ஞானத்தில் விருத்தியடைவாள் என்பதை அறிந்து, அவரிடம் பயில எவ்வாறு ஒழுங்கு செய்யவதென்பதை திட்டமிடல் வேண்டும். அதற்காகும் செலவுகளைச் செய்வதற்குப் பணத்தை எவ்வாறு பெறுவதென்பதற்கும் திட்டமிடவேண்டும். இவ்வாறு வீட்டை நீ நிர்வகிக்கும் போதும் திட்டமிட்டுச் செயற்படவேண்டும். திட்டமிடுவது கற்பனை செய்வதல்ல. அது செயற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். உனது நோக்கத்தை அடையக்கூடியதாகவும் இருக்கவேண்டும். பெரும்பாலானவர்கள் செயற்படுத்தமுடியாத திட்டங்களைத் தீட்டுவார்கள். அது இறுதியில் அடைய முடியாத பகற்கனவாகிவிடும்.

வீட்டை நிர்வகிக்கும் பெண்கள் வரவு- செலவைத் திட்டமிட்டுச் செயற்படுத்தப் பழகுவது முக்கியமானதாகும். பலர் எந்தவிதமான திட்டமுமின்றி, கிடைக்கும் பணத்தை மனம்போன போக்கில் செலவு செய்கிறார்கள். இதனால், மீளச் செலுத்தமுடியாதளவுக்குக் கடன்படுகிறார்கள். வரவு- செலவுத்திட்டம் நாட்டிற்கும் நிறுவனங்களிற்கும் மட்டும் தேவையானது என்று கருதக்கூடாது. வீட்டிற்கும் அது அத்தியவசியாமான தொன்று.

நீ உனது வீட்டின் நிதிமந்திரி. உன் வரவு- செலவுத்திட்டத்திலே உன் குடும்பத்தின் உயர்வு தங்கியிருக்கிறது என்பதை நினைவில் நிறுத்திக்கொள்!

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# கவிதைச் சோலை

## கலங்காதே கண்ணே காத்திரு

**சுல்பிகா**

நீ என்னிடம்
அன்புக்காக மண்டியிட்டாய்
கோரைப் புல்லிடம் மண்டியிடும்
கும்பிடு தட்டான் போல்

ஆயிரம் தடவை
இந்த ஆத்மாவில்
அவை எழுதப்படட்டும்

அறிவால் முதிர்வு கொள்
என் அன்பே!
உன் அன்பை ஏற்றுக் கொள்ள
இப்போது முடியாதிருப்பதற்காக
என்னை மன்னித்து விடு

தேடல்கள், புரிதல்கள்
வெறுத்தல்கள், மறுத்தல்கள்,
கோரல்கள், போரிடல்கள்
எனப்பல வேலைகள் உள்ளன.
எல்லாம் முடிவில்
நான் உன்னிடம் வருவேன்.
உடன் இருக்கவும்
உன் மீது அன்பு செலுத்தவும்
உன் அன்பை ஏற்றுக் கொள்ளவும்
நான் உன்னிடம் வருவேன்.
காலைக் கதிரும்
வெளிப்புமாக இணைந்து கொள்ள.

அது வரை
உன் காதலைக்
காத்து வைத்திரு
கலங்காதே
கன்னா பின்னா என
கோபமும் கொள்ளாதே

போர்க்காலம் கொடியது
என்னையும்
உன்னையும்
நம் காதலையும்
சுட்டெரித்து விடும்
போரின் முடிவில்
நான் உன்னிடம் வருவேன்

காரிருளில் உன்
கால்களிடை
முகம் புதைக்க
கவலை மறந்து
உன் மார்பில்
சாய்ந்து கொள்ள
என் தலையைக்
கோதி... விடும் உன்

கைகளில் முத்தங்கள்
காணிக்கை தர
உன்னை நீயும்
என்னை நானும்
மறந்து போக
யாரும் கண்டறியாத
எம் உயிரை
நாம் உயிர்த்தெடுக்க
நான் உன்னிடம் வருவேன்.



நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பல்லவை கற்றும் பயம்இலரே நல்அவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

-திருக்குறள.

# நமது நோக்கு

## 'உயரும்' பாதுகாப்பு வலயம்!

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள பொதுமக்களது வீடுகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் - அவற்றிலிருந்து வெளியேற வேண்டும் என அரசாங்கத்தரப்பு பேச்சுக்களில் இணக்கம் கண்டிருந்த போதும் - அது நடைமுறைப்படுத்தப்படுவது காலதாமதமாவதோடு - தற்போது, 'சுத்திச் சுத்திச் சுப்பற்ர கொல்லைக்குள்ள' என்பதுபோல - வீடுகளிலிருந்து விலகிக் காணி தேடும் படலத்திற்கு படைத்தரப்பு முயற்சிப்பதாகத் தெரியவந்துள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் இது தொடர்பாக - இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல சமர்ப்பித்திருந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கும் விடுதலைப் புலிகள் -

பொதுமக்களின் வீடுகளிலிருந்து, பொதுமக்களின் காணிகளுக்கு இராணுவம் இடம்மாறுவது எதுவித அர்த்தமும் இல்லாதது. நாமும் அனுமதிக்கமாட்டோம். மக்களும் அனுமதிக்கமாட்டார்கள் என அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டனர்.

அதேவேளை - உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள பயன்படுத்தப்படாத அரசாங்கக் கட்டடங்களைச் சுவீகரிக்கும் முயற்சியில் இராணுவம் இன்னொரு வழியில் இறங்கியுள்ளது.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் - யாழ்.மாநகர சபைக்கு, வட -கிழக்கு மாகாண ஆளுநரிடமிருந்து வந்த கடிதமொன்றின் பிரகாரம் மாநகர சபையின் பழைய கட்டடத் தொகுதியைப் படையினருக்குக் கையளிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்று - தற்போதுள்ள படை நிலைகளிலிருந்து வெளியேறுவதாகப் போக்குக்காட்டும் இராணுவம் - தாம் முன்பிருந்த இடங்களிலிருந்து, குறிப்பிட்ட சற்றுத்தூரத்திலேயே மீண்டும் தமது இருப்பிடங்களை அமைத்து வருவதையும் காணமுடிகின்றது.

குறிப்பாகத் தென்மராட்சிப் பகுதியில் இந்த 'இடப்பெயர்வுகள்' நடப்பதை அதிகம் அவதானிக்க முடிகின்றது.

ஒரு புறம் இவ்வாறு சில செயற்பாடுகள் அரங்கேற, மறுபுறம் - ஏற்கனவேயுள்ள இராணுவ நிலைகளையும், பதுங்கு குழிகளையும் படையினர் பலப்படுத்தி வருவதானது - இன்னமும் இறுக்கம் தளரவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

இந்தளவில் - தாம் நிலை கொண்டுள்ள இடங்களிலிருந்து விலகவிரும்பாத நிலைப்பாட்டையே இதுவரை படையினரிடம் காணக்கூடியதாகவுள்ளது. உயர்பாதுகாப்பு வலயங்கள் மட்டுமல்ல - அதற்கு வெளியேயும் படையினரின் இவ்வாறான போக்குத் தொடருமானால்- மக்களது மீள்குடியேற்றம் என்பது இணக்கம் காண முடியாத பிரச்சினையாகவே தொடரும். இது சுமுக நிலைக்கான முக்கிய தடைக்கல்லாவதுடன் முன்னெடுக்கப்படத் திட்டமிடப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளையும் மிக மோசமாகவே பாதிக்கும்.

இராணுவத்தின் இந்தப் பின்னடிப்பானது - உயர் பாதுகாப்பு வலயம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ள நம்பியாரின் அறிக்கையும் எவ்வாறிருக்கும் என்பதைக் கோடிகாட்டுமாப்போலவே உள்ளது.

நம்பியாரின் அறிக்கை தொடர்பாக, விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து வெளியான கருத்துக்களின் அடிப்படையில் - புலிகள் அந்த அறிக்கையில் முன்னேற்றகரமான விடயங்கள் குறிப்பிடப்படுமா எனச் சந்தேகம் கொண்டுள்ள நிலையில் - அரசாங்கம் - குறிப்பாக அமைச்சர் மிலிந்த மொறகொட போன்றவர்கள் நம்பியாரின் அறிக்கையை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகச் சொல்லியே வருகின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தபோது- பொது அமைப்புக்களைச் சந்தித்துப் பேசியபோது நம்பியார் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் வைத்து நோக்கும்போது - அரசாங்கத் தரப்புக் கூறுவது போல, அந்த அறிக்கை 'முக்கியத்துவம் வாய்ந்ததாக' தமிழர்களுக்கு இருக்கமாட்டாது என்றே வலுவாகச் சொல்லிவிடலாம்.

உண்மைநிலை இவ்வாறிருக்கையில் - அமைச்சர் மிலிந்த வைத்திருக்கும் நம்பிக்கையின்படி நம்பியாரின் அறிக்கை - படையினரின் தற்போதைய நிலைப்பாட்டையே வழிமொழிவதாக இருப்பின் - அது, சுமுக நிலையைத் தோற்றுவிக்கக் கூடியதாக, துணைசெய்யக் கூடியதாக இருக்குமெனக் கருதமுடியாது.

மாறாக - மக்களது மீள்குடியேற்றத்தை இன்னமும் சிரமதிசைக்குள்ளாக்குவதாகவே அமைந்துவிடும்.

# மாநகரசபைக்கு சொந்தமான காணிகளை படையினரிடம் ஒப்படைக்க ஆளுநர் உத்தரவு

## படைத்தளம் அமைப்பதற்கு முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரமன்றத்தின் காணியை, யாழ்.நகரில் நிலைகொண்டுள்ள படையினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனரினால் யாழ்.மாநகரசபைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான- மாநகரசபைக் கட்டடம் அமைந்திருந்த- யாழ்.பொதுநூலகத்திற்கு முன்பாக உள்ள காணியையே இவ்வாறு ஒப்படைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 25 ஆம் திகதி அமைச்சரவை கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.நகரின் மத்தியில் மக்கள் குடியிருப்பிலுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறி, யாழ்.நகர்க் கரையோரப்பகுதிகளில் முகாம் அமைக்க வசதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மாநகரசபையினரிடம் இருந்து- யாழ். மாநகரசபையின் காணி தொடர்பான விபரங்களும், அதனை அண்டியிருந்த வாடிவீடு மற்றும் சுற்றுலா விடுதி போன்றவற்றின் விபரங்களும் யாழ்.நகரப் படைத்தரப்பினரால் பெறப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சட்டபூர்வ பதிவுகளற்று நடக்கும் அகதிமுகாம் திருமணங்கள்

வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் நடைபெறும் திருமணங்கள் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்படுவதில்லை என்றும், இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் யுனிசெப் அமைப்பு நடத்திய ஆய்விலிருந்து தெரியவந்திருக்கிறது.

யுனிசெப் அமைப்பு - உள்ளூர் அரசார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் இணைந்து அண்மையில் வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் ஆய்வு ஒன்றை நடத்தியிருந்தது. இந்த ஆய்விலிருந்து -

அகதிமுகாம்களில் தங்கியிருப்போர் மத்தியில் நிகழும் திருமணங்கள் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்படுவதில்லை என்றும், இதற்குப் பெண்களுக்கான ஆகக் குறைந்த திருமண வயதெல்லையை அடையமுன்னரே திருமணங்கள் இடம்பெறுவதே பிரதான காரணம் என்றும் கண்டறியப்பட்டிருக்கிறது.

அகதிமுகாம்களில் உள்ள பெற்றோர் - தமது பெண்பிள்ளைகள் பூப்பெய்திய சிறிது காலத்துக்குள்ளேயே அவர்களைத் திருமணம் செய்துகொடுத்துவிடுவதாகவும் இந்த ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் 7000 குடும்பங்கள் வசித்து வருவதாகவும் யுனிசெப் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊடகவியல் பயிற்சிநெறிக்கு இணைப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படவிருக்கும் ஊடகவியலாளருக்கான பயிற்சிக்கு- இணைப்பாளராக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே புறநிலைப் பட்டப்படிப்பு அலகின் இணைப்பாளராக இருந்து வருகின்றார்.

டென்மார்க் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் ஊடகவளப் பயிற்சி நிலையத்தின் ஆரம்பக்கட்ட நடவடிக்கையை இவர் மேற்கொண்டு வருகின்றார்.

(ச,சு)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான

# வழக்குகளைத் துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபருக்கு சந்திரிகா கடிதம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டவிதிகளின் கீழும் கைதாகிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் மீதான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - சட்டமா அதிபர் கமலசபேசனைக் கேட்டுள்ளார்.

சட்டமா அதிபருக்கு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தடைச் சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் கைதாகி, சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான வழக்குகள் பல வருடங்களாகத் தொடர்வதால் சிறைகளில் இடநெருக்கடியும் ஏற்படுகின்றது.

இவ்வாறு கைதிகளை நீண்ட காலத்துக்குத் தடுத்து வைத்திருப்பது குறித்து மனித உரிமை அமைப்புகள், மூத்த பிரஜைகள், பொது அமைப்புகள் தமது கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதனால் இந்த வழக்குகளின் விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும்- சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

(க)

# புலிகளின் கப்பலை சர்வதேசக் கடற்பரப்பிலும் மூழ்கடிக்கும் அதிகாரம் கடற்படைக்கு உள்ளது

## ஜே.வி.பி. தலைவர் லண்டனிலிருந்து கடற்படைக்கு வாழ்த்து



(லண்டன்)

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் கப்பலைத்தாக்கி மூழ்கடித்த கடற்படையினருக்கு - லண்டனிலிருந்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கப்பலை மூழ்கடித்த கடற்படையினருக்கு - சோமவன்ச அமரசிங்க அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

புலிகளின் கப்பலை மூழ்கடித்த கடற்படையினருக்கு நன்றி செலுத்த நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும், ஜே.வி.பிக்கும் கடமையுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற போர்வையில் சட்ட விரோதமாகப் புலிகள் ஆயுதங்களைக் இறக்கி வந்தமை ஊரறிந்த இரகசியம். கடற்படையினரின் பொறுப்பற்ற செயலாலோ, பலவீனத்தாலோ இது நடக்கவில்லை. இதற்குப் பல தடைகள் இருந்துவந்தன.

அரசாங்கத்துக்கு தெரியாமல் போக்குவரத்தில் ஈடுபடும் புலிகளின் கப்பல்களைச் சர்வதேசக் கடற்பரப்பிலோ, இலங்கைக் கடற்பரப்பிலோ முறியடிப்பதற்கான உரிமை - கடற்படையினருக்கும், விமானப்படைக்கும் உள்ளது.

தமது உரிமைகளைத் துணிவானமுறையில் பயன்படுத்தும் கடற்படையினருக்குத் தமது ஆதரவு உண்டு என்றும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மேலும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# உயிரியல் விஞ்ஞானபீடத்துக்கு மேலும் ஒன்பது பேர் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு மூன்றாவது தடவையாக வெற்றிடங்கள் நிரப்புவதற்காக ஒன்பது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விபரங்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

கே.பிரதீஜா, ஏ.ஈ.எஸ்.பற்றிக், எஸ்.சிவதர்சன், எஸ். கார்த்திகா, ஆர்.இளங்குமரன், எஸ்.பற்குணராஜா, ரி.துளசிதா, ரி.ரமணன், எஸ்.கௌசாங்கன் ஆகியோரும்,

விவசாய விஞ்ஞானத்திற்கு- எல்.சி.நிலானியும் தெரிவாகியுள்ளனர்.

விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களைப் பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையுடன் தொடர்பு கொண்டு உடன் விரிவுரைகளுக்குச் செல்லுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

(ச,சு)

# ஈழத்தமிழ் மீனவர்கள் மீது திட்டமிட்டு ஏற்படுத்தப்படும் துன்பங்களை எப்படி வெல்வது?

**போர்** நடைபெற்ற காலத்தே மீனவர்கள் முகங்கொடுத்த கஷ்டங்கள், உயிரிழப்புக்கள், காயமடைதல்கள், குருதி சிந்துதல்கள் என்பனவெல்லாம் ஒரு கட்டத்துக்குரியனவாக மாறிவிட்டன. கரையோரங்களையும், தமிழர்களின் கடல் பிராந்தியத்தையும் கைப்பற்றி வைத்திருக்கும் கடற்படையினரால் அவை நேர்ந்தன.

ஆனால், இப்போதும்கூட மீனவர்கள் இதனையொத்த இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு ஏற்ப மீனவர்களைக் கடலில் சுதந்திரமாகத் தொழில்செய்ய அனுமதித்திருப்பதாகக் கடற்படை கூறுகின்றது. அவர்களது கருத்தில் சுதந்திரமாகத் தொழில் செய்தல் என்பது, மீனவர்கள் எதிர்பார்க்கும் சுதந்திரம் அல்ல என்பது வேறு விடயம்.

இங்கே இன்னொருவகையிலும் ஈழத்தமிழ் மீனவர்களைக் கடற்படை ஒடுக்கமுனைகின்றது. முப்படைத் தளபதியான ஜனாதிபதி சந்திரிகாவின் செல்லப்பிள்ளையாகவுள்ள கடற்படை, இராஜதந்திர நகர்வாகவும் இதனை மேற்கொள்ளத் தலைப்படுகின்றது. அதுதான் இந்திய மீனவர்கள் வடகடலில் அத்துமீறிப் பிரவேசிப்பதும், மீன்பிடிப்பதுமாகும்.

கடல் வலயத் தடைச்சட்டம் அமுலில் இருந்தபோதே, இந்திய



சொந்தக் கடலில் திரியவும் தொடருது தடை...!

மீனவர்களின் ஊடுருவல்கள் நிகழ்ந்தன. ஈழ மீனவர்களின் குடும்பங்கள் பட்டினியிலும், நோயிலும் சாவை எதிர்நோக்க, இந்திய மீனவர்கள் நமது கடல்படு திரவியங்களை அள்ளிப்போயினர். செல்வம் குவித்தனர். சிறிலங்கா கடற்படையினரால் இடர் ஏதும் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை.

ஆனால், இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து, ஈழத்தமிழ் மீனவர்களின் கடலில் தொழிலில் ஈடுபடுவது கடந்த ஓராண்டினுள்தான் பெரும் சிக்கலாக, முடிச்சிறுகி வருகிறது. நமது மீனவர்கள் ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபடத் தொடங்கி விட்ட இக்காலப்பகுதியில், இது சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் சூழ்ச்சிகளோடு நடைபெறுவதாகத் தெரிகிறது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் என்பது எல்லை தாண்டி வந்து மீன்பிடிப்பது மட்டுமாக இல்லை. இப்போதுதான் ஆழ்கடல் மீன்பிடியில் தவழ ஆரம்பித்துள்ள நமது மீனவர்களின் மூலதனத்தையே நாசமாக்குவதாக உள்ளது,

ஈழத்தமிழ் மீனவர்களைவிட மீன்பிடித்தொழில், தொழில்நுட்பத்தில் இந்திய மீனவர்கள் பலம் வாய்ந்தவர்கள். அவர்களின் எல்லை மீறிய கடற்பிரவேசத்தால் வலைகள் அறுத்தெறியப்படுகின்றன. உருவாகும் கண்ட மேடைகள் சிதைக்கப்படுகின்றன. இதனால் பல லட்சம் இழப்பு வாராந்தம் ஏற்படுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கடல்படுதிரவியங்கள் அவர்களால் அள்ளப்படுகின்றன. கணிசமானவை பாரிய இயந்திரப் படகுகளின் தாக்கத்தால் கலை யுண்டு போகின்றன.

இது தொடர்பாக வடபகுதி மீனவர்கள் - பலருக்கும் முறைப்பாடு செய்து விட்டார்கள். ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற எவரும் மிச்சமில்லை. நாட்டின் எல்லைக்கப்பால் இராமேஸ்வரம் மீனவர் சங்கங்களின் தலைவருக்கும்கூட முறைப்பாடு செய்யப்பட்டுவிட்டது. எல்லாவற்றுக்கும் சரியானமுடிவு காணப்படும் என்ற பதில் மட்டுமே வந்தது. செயலில் எவையும் இதுவரை இல்லை.

தொடர்ந்தும் பாதிப்புக்கு உட்பட்டநிலையில், தாமே - தம்மை பேணவேண்டிய கட்டத்துக்கு மீனவர்கள் தள்ளப்பட்டார்கள். அதன் விளைவாகவே இந்திய மீனவர்கள் சுற்றிவளைத்து, ஈழக்கடலில் வைத்து சிறைப்பிடிக்கப்படும் சம்பங்கள் ஆரம்பித்தன.

உண்மையில் இந்தச் சிறைப்பிடித்தலை கடற்படையினரே செய்திருக்கவேண்டும். இலங்கைக் கடற்பரப்பின் எல்லையினுள் எவரும் பிரவேசிக்கக்கூடாது என்பதிலும், தேசிய இறைமையை மீறிவிடக் கூடாது என்பதிலும் கடற்படை கரிசனை கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தக் கரிசனை மெய்யானதாக இருந்தால் - இந்திய மீனவர்களோ, வேற்று நாட்டவர்களோ உள்ளே வருவதையும் அவர்கள் தடுக்கவேண்டும். ஆனால், நடப்பவையோ மாறானவையாகவே இருக்கின்றன.

சிலமாதங்களின் முன் மன்னாரில் ஈழமீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் - நீதிமன்ற உத்தரவின்பேரில் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அப்போது இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளப்படும் எனத் தூதரகத்தினால் வார்த்தைகளில் மட்டும் கூறப்பட்டன. பின்பும் அவர்களின் அத்துமீறல்கள் நடந்தன.

சிறிலங்காப் படையினரின் பகுதிக்குள் நடந்தவற்றைவிட, மிக அண்மையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இத்தகைய சம்பவம் நடைபெற்றது- பூநகரி கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டவர்களை அப்பகுதி மீனவர்கள் கைது செய்தார்கள். இது புலிகளின் பிரதேசம் என்றவுடன் இந்தியா அதிகம் இராஜதந்திர நடவடிக்கைகளைப் பிரயோகித்து விடுவித்தது.

அதற்குப் பிந்திய சம்பவமாக மன்னாரில் 118 மீனவர்கள்- 21 இழுவைப்படகுகளோடு பிடிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் ஈழத்தமிழர்கள் மீதான கடுமையான நடவடிக்கைகளாகவும், அரசியல் விவகாரமாகவும் மாறியுள்ளது. சிறிலங்கா பொலிஸாரோ- இது மன்னார் மீனவர்களின் அடாவடித்தனமான செயல் எனக் கூறியுள்ளனர். அவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செயற்படக்கூடாதென எச்சரித்துமுள்ளனர். கடற்பிராந்தியத்துக்குள் இடம்பெறும் அத்துமீறல்களைப் பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிப்பது மட்டுமே பொதுமக்களின் கடமையென்றும், சிறைப்பிடிக்கும் அனுமதி எவருக்கும் இல்லை எனவும் கூறியுள்ளனர்.

கடந்த காலங்களில் பொலிஸார் கூறியபடி செயற்பட்டதனால் கிடைத்த பயன் என்ன என்பது சொல்லவேண்டியதில்லை. பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள்- மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களில் 93 பேரை விடுவிக்க உத்தரவிட்ட நீதிபதி- இழுவைப் படகுகளின் உரிமையாளர்கள் 21 பேரையும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களில் 04 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்தியாவில் இந்த விடயம் அரசியல் விவகாரமாக மாறியிருக்கிறது. இந்தியப் பாராளுமன்றத்தில் இது குறித்துக் காரசாரமாகப் பேசப்பட்டிருக்கிறது. தமிழக மீனவர்கள் இவ்வாறு பலதடவைகள் தாக்கப்பட்டிருப்பதாகவும், நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் முன்னர் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்துள்ளார்கள் எனவும் அங்கே கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் கடற்படையினரின் தாக்குதலில்தான் தமிழக மீனவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால், ஈழத்தமிழ் மீனவர்களின் தாக்குதலினால்தான் அவர்கள் இறந்தனர் என்ற கருத்துப்பட ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன. இந்தப் பிரச்சினையைக் கடற்படை - ஈழத்தமிழர்களுக்கும், தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாடாக வளர்க்க முயல்கின்றது என்றே தெரிகிறது.

சமாதான முயற்சிகளுக்கு எதிராகப் செயற்படும் சந்திரிகாவின் கீழ் இயங்கும் சிறிலங்கா கடற்படை, இப்போது இந்திய மீனவர்கள் மூலம் இருபக்கத் தமிழர்களுக்கும் இடையில் முரண்பாட்டை வளர்க்க முற்படுகிறது. இந்திய மீனவர்களிடம் கடற்படையினரே தரகு வாங்கிக்கொண்டும், தமது புலனாய்வு நடவடிக்கைக்குப் பயன்படுத்தியும் இந்த அத்துமீறல்களை ஊக்குவிப்பதாக மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் நியாயப்படுத்தப்படக் கூடியனவே உண்மையில் இப்போதைய சமாதான முயற்சிகளுக்கும், புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் கடும் எதிர்ப்பைக் கடற்படைதான் முன்வைக்கின்றது. கடந்தகாலச் சமாதான முயற்சிகள் குழம்பியதற்குக் கடற்படையும் காரணமாக இருந்தது. இச்சமாதான முயற்சிகளுக்கு எதிரான சர்வதேச சக்திகள் - சிறிலங்கா கடற்படை ஊடாகக் குழப்பத்தை உண்டு பண்ண முயற்சிக்கின்றன. அதற்கு ஒரு பக்கக் கருவிகளாக இந்திய மீனவர்களைக் கையாளவும் முற்படுகின்றன.

இதன் மூலமாக எதிர்காலத்தில்- ஈழத்தமிழர்களுக் கும், தமிழகத் தமிழர்களுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. இதன் ஆரம்பமாக இராமேஸ்வரம் அகதி முகாமிலுள்ள ஈழத்தமிழர்கள் மீதான தாக்குதல் முயற்சி நிகழ்ந்துள்ளது. அத்துடன், ஈழமீனவர்கள் ஆயுதங்கள் கொண்டு அச்சுறுத்தப்படுவதும் தொடங்கிவிட்டது.

மன்னார் சம்பவத்தில் தப்பிச் சென்ற மீனவர்கள் தம்மீது கைக் குண்டுகள் வீசித்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் திரிபுபடுத்தி, பிரச்சினையைத் திசைதிருப்ப முற்பட்டுள்ளனர். சர்வதேச செய்தி ஊடகம் ஒன்று - இந்திய மீனவர்களுக்கு எதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் என வர்ணிக்க இருநாட்களாகப் பிரயத்தனம் செய்தது.

சிக்கல் கடும் முடிச்சாக இறுகத் தொடங்கிவிட்ட நிலையில்தான், இந்தியா - இலங்கை அரசுடன் பேசித்தீர்வு காண முயல்வதாகச் செய்திகள் கூறுகின்றன. அவை நடைபெறுமா? ஈழத்தமிழ் மீனவர்களின் தொழில் வளங்கள் பாதுகாக்கப்படுமா என்பதெல்லாம் பொறுத்திருந்தே பார்க்கப்படவேண்டியவையாகின்றன.

**ஞாபகன்**

# ஆயுதப் போராட்டத் தோல்வியால் அரசியற்களம் வந்துள்ள ஜே.வி.பி.

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தியப் பொருட்களை விற்பவர்கள் பெரும்பாலும் தமிழ் வர்த்தகர்களாக இருப்பதும் இதற்கு இன்னோர் காரணமாகும்.

ஆனால், இன்றுள்ள நிலையோ வேறு. ஐ.தே.கட்சி - புலிகள் கூட்டை உடைப்பதில் இந்திய உதவியை நாடவேண்டியுள்ளது. இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின்படி வழமையான வியாபாரத் தொடர்புகளையும் தாண்டி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கான சந்தை வாய்ப்பினை இலங்கையில் இந்தியா பெற்றுவிட்டது.

இன்று இலங்கை முழுவதுமே இந்தியத் தயாரிப்புக்களான புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களில் மோகித்து நிற்கிறது. (சிலவேளை விமல் வீரவன்சகூட அதில் ஒன்றை ஓடக்கூடும்). அவற்றை வாங்க வேண்டாம் எனச் சிங்கள மக்களுக்கு அறிவித்தால் அதுவே ஜே.வி.பியின் இறுதி அறிவிப்பாகக்கூட இருந்துவிட வாய்ப்புண்டு.

இந்நிலையில், ஜே.வி.பிக்குக் கொள்கை இல்லாது போய்விட்டது. சீனா முதற்கனவாகி மறைந்து போய்விட்டது. ஜே.வி.பியின் ஆரம்பம், நோக்கம் எல்லாமே மறைந்து விட்டது. இந்தியாவை ஆதரித்



நந்தன குணதிலக விமல் வீரவன்ச ரீல்வின் சில்வா

தேயாகவேண்டும் என்றநிலை, கூட்டுச்சேர்ந்த கட்சிகளுடன் ஜால்ரா போட்டேயாக வேண்டும் என்ற கொள்கை. இவற்றையெல்லாம் மீறி சிங்கள மக்களுக்கு ஜே.வி.பியால் மேலதிகமாக எதைத்தான் வழங்க முடியும். நோர்வே நாட்டில் இடம் பெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில் - விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கலந்துகொள்வதை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டித்தது. நாடாளுமன்ற விவாதத்தின்போதுகூட இது பற்றிக் கதைத்தபோது, அதற்குப் பதிலளித்த ஐ.தே.கட்சி உறுப்பினரான டாக்டர் ராஜித சேனரத்ன - "புலிகளின் பிரதிநிதிகளை மாநாட்டிற்கு அழைத்துச்செல்வதில் தப்பொன்றுமில்லை. பிரபாகரனைக் கூட்டிச் சென்றால் அதைவிடக் கூடுதலான காசு தருவார்கள் என்றால் நாங்கள் அதையும் செய்யத்தயாராக இருக்கிறோம்'' என்றார்.

நோர்வே அரசு, விடுதலைப் புலிகளுக்குச் சக்திவாய்ந்த வானொலி ஒலிபரப்புக்கருவி ஒன்றினை வழங்கியதற்காகவும் ஜே.வி.பி கடுமையான சர்ச்சையைக் கிளப்பியது. இந்த வானொலிச் சர்ச்சை தொடர்பில் சந்தேசிய ஒலிபரப்பாளரான எம்.ஜே.ஆர். டேவிட் இவ்வாறு கூறினார் - "ஒரு வானொலி நிலையம் ஆரம்பிப்பதற்கு முன் அதற்கான விளம்பரங்களை மிகவும் சிரமப்பட்டே மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், புலிகளின் குரல் வானொலி நிலையத்தைப் பொறுத்தவரை அதற்கான முழு விளம்பரத்தினையும் ஜே.வி.பி பொறுப்பேற்றுச் செய்துவிட்டது. எல்லா மக்களும் எப்போ ஜனவரி 16 ஆம் திகதி வரும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள்''. இதுகூட ஜே.வி.பியின் பிரசாரத்துக்குக்கிடைத்த பின்னடைவுதான். சிங்கள மக்களைப் பொறுத்தவரை இவையெதுவும் பெரிய விடயங்கள் என்று சொல்வதற்கில்லை.

தற்போதுள்ள அரச எதிர்ப்பு அணியில் முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் கொள்வதற்கான முன் முயற்சியில் சந்திரிகா பண்டாரநாயக்க - ரவூப் ஹக்கீமுடன் ரகசியப்பேச்சுக்களில் இறங்கியிருப்பதாக அறியமுடிகிறது. இதில் வரப்போகும் பின்விளைவு முஸ்லிம்களுக்கு ஆபத்தானது. வட- கிழக்கில் புலிகளைப் பகைப்பதுவும் தீது. தென்பகுதியில் வர்த்தகத்தையே பிரதான தொழிலாகக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள்- ஐ.தே.கட்சியைப் பகைப்பதுவும் தீது.

மொத்தமாக ஜே.வி.பியின் அரசியல் நலம் என்பது - "ஐக்கிய இலங்கை என்ற வரையறையை உடைப்பதாகவே அமையும். இச் சமாதானச் சூழல் மாறுகின்ற சூழலில் இலங்கை இராணுவத்துக்கு ஒரு லட்சம் சிப்பாய்களையாவது ஜே.வி.பி. சேர்த்துக்கொடுத்து சந்திரிகா அரசிற்கு உதவுமா என்றால் அதுவுமில்லை. எனவே, அரச எதிர்ப்பின் கூட்டு என்பது சந்திரிகாவைப் பொறுத்தவரை - "எனக்கு மூக்கில்லாவிட்டாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழைக்கவேண்டும்'' என்பதுதான்! *

**விஜயன்**




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# நியாயம் தெரிகிறதல்லவா!


நீங்கள் என்னைப் புரிஞ்சுகொண்டீங்களே - Thanks.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் பதவியில் ஷோண் பொல்லக் இல்லை. ஆனால் அவர் ப்தவி விலகும்போது, தன் மன ஆதங்கத்தை எடுத்துக்கூறிய பின்பே தலைமைப்பதவியிலிருந்து நீங்கியுள்ளார். உண்மையில் நீங்கும்படி அவர் கேட்கப்பட்டுள்ளார்.

ஆட்ட நிர்ணய விவகாரங்கள் தொடர்பில், முன்னாள் அணித்தலைவர் ஹன்சி குற்றவாளியாகக் காணப்பட்டதும், அதைத்தொடர்ந்து தென்னாபிரிக்கக் கிரிக்கெட் தொடர்பாக, அனைவரும் மிகுந்த கோபமும், வெட்கமும் அடைந்திருந்தார்கள்.

இதன் காரணமாக, தென்னாபிரிக்கக் கிரிக்கெட் நிர்வாகம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டி, பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதாயிற்று.

இது ஏதோ ஒருவகையில், தென்னாபிரிக்க அணியின் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை உணரமுடிகிறது. இதனையே இப்போது ஷோண் பொல்லக் எடுத்துக் கூறுகின்றார். ஹன்சியின் விவகாரத்தின்பின், அணித்தலைமை என்ற வகையில் பல அழுத்தங்கள், கட்டுப்பாடுகள் தன்மீது தொடுக்கப்பட்டன என்று, ஷோண் பொல்லக் கூறுகின்றார்.

"எல்லா விடயங்களிலும் இணைந்த தொரு செயற்பாட்டை தென்னாபிரிக்கக் கிரிக்கெட் நிர்வாகம் நிர்ப்பந்தித்தது. எனது கண்ணோட்டத்தில் நான் வெற்றிகரமாகச் செயற்பட அது தடையாக இருந்தது என்றே எண்ணுகின்றேன்'' என்கிறார் அவர்.

ஒரு அணித்தலைவர் என்றவகையில் நான் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும். அதேவேளை, எல்லோரதும் ஆதரவு எனக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்கிறார் தொடர்ந்து.

தனது, அணி நடாத்தும் பாணி மற்றவர்கள் எதிர்பார்த்த பாணியல்ல என்பது, தனக்குச் சாதகமாக இருக்கவில்லை என்கிறார் அவர். ஒரு அணித்தலைவர் என்றவகையில், எனது தீர்மானங்களை நிறைவேற்ற நான் எதையும் செய்யத்தயாராக இருந்தேன். ஆனால், தீர்மானங்களை நிறைவேற்ற எனக்குச் சுதந்திரம் இருக்கவில்லை. இது எமது தோல்விக்குக் காரணமாக அமைந்தது என்கிறார்.

அணித்தலைவர் கடமையிலிருந்து நீங்கும்படி ஹென்றி ஓமர் கேட்டுக்கொண்டார். நான் அதனை ஏற்றுக்கொண்டேன்.

கடந்த வருடம் அவுஸ்திரேலியாவிடம் தோல்விகண்டபோது, பயிற்றுநர் பலிக்கடாவாக்கப்பட்டார். பின்னர் புதிய பயிற்றுநராக எரிக் சிமன்ஸ் வந்தபோது- பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையை வெற்றிகொண்டோம். இம்முறை நாம் உலகக்கிண்ணத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் உண்மையில், கணிப்புக்கான பத்துரன்கள் பயிற்றுநர் முன்னிலையில் தான் இருந்தன. அந்த ஒரு ஓட்டத் தோல்விக்கு நான் காரணமல்ல என்கிறார் பொல்லக்.

தற்போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிரீம் ஸ்மித் அணித்தலைவராகியுள்ளார். அவருக்கு எனது முழு ஆதரவையும் நான் வழங்குவேன் என்று முடிக்கிறார் ஷோண் பொல்லக்.

- ரூபன்.

# இப்போது அழுது என்ன பயன்?

இங்கிலாந்தின் கிரிக்கெட் சபை (ECB) பெரும் நிதி நெருக்கடிக்குள்ளாகியிருப்பதை அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. ECB, அணி வீரர்களுக்கான ஒப்பந்தங்களைக் குறைத்துக் கொள்ளத் தீர்மானித்ததிலிருந்து இது புலப்படுகின்றது. இந்த நிதி நெருக்கடிக்குக் காரணமாக அமைந்தது, உலகக்கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்து எதிர்கொண்ட நெருக்கடிகளாகும்.

ஒன்று- சிம்பாப்வேயுடன் விளையாட மறுத்ததால் ICC இற்கு வழங்க வேண்டிவந்த நட்டஈட்டுத்தொகை.

இன்னொன்று - அடுத்த கட்டத்துக்குப் போக இயலாமற்போனமை. ஏனெனில், இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு போட்டியிலும், இரண்டு அணிகளுக்கும் பெருந்தொகைப்பணம் வழங்கப்பட்டே வந்தது.



இனிமேல் கிரிக்கெட்டை விட்டு ஓடமாட்டோம்.

எனவே, SUPER SIX இற்குள் இங்கிலாந்து வந்து, மேலும் மேலும் முன்னேறியிருந்தால், மில்லியன் கணக்கில் டொலர்கள் குவிந்திருக்கும். எனவே, இத்தகைய பண மழையை இழந்தநிலையில் கூடிய அளவு வீரர்களை ஒப்பந்தம்செய்து கொள்ளமுடியாதநிலையில் ECB காணப்படுகின்றது.

ஆஷஸ் மற்றும் உலகக்கிண்ணப்போட்டிகளில் சிறப்பாகச் செய்த ஜிம்மி அண்டர்சன், ஸ்ரீவ் ஹேமிசன், றொபர்ட் கீ போன்றவர்கள் ஒப்பந்தம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. உண்மையில் இருபது பேர் மட்டில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

ஆனால், இது வெறும் கற்பனையாகத்தான் இருக்கும் என்கிறார்கள் அதிகாரிகள். ஏனெனில், சிம்பாப்வே செல்லாமல் விட்டதன் மூலம், இவர்களுக்கு ICC வழங்கவேண்டிய பெருந்தொகை முடக்கப்பட்டு விட்டது. இந்தச்சுமையையும் ECBயே பொறுப்பேற்க வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது. இதுமட்டுமன்றி சிம்பாப்வே செல்லாமல் விட்டமை தொடர்பில் ICC, ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண் மற்றும் நட்டஈட்டுத் தொகையையும் ECBயிடம் கோரும் நிலை உருவாகியுள்ளது. இப்படியெல்லாம் ECB குழம்பிப்போய் இருக்கும் நிலையில், சிம்பாப்வே இங்கிலாந்துக்குச் செல்ல மறுத்தால் நிதி நிலை இன்னும் மோசமாகும். என்னவோ எல்லாம் புரியும்போது காலம் கடந்துவிடுகிறது.

- மாதவன்.

# BATTLE OF HEROES - 2003 - 03RD ENCOUNTER

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரும் இரண்டு போட்டிகளும் நடைபெற்றுமுடிந்த நிலையில், மூன்றாவது பெரும் போட்டி இன்றும் நாளையும் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

## ஸ்கந்தா அணி



*இருப்போர்: இடமிருந்துவலமாக* - திரு.வி.நந்தீஸ்வரன் (பொறுப்பாசிரியர்), திரு.ரி.ராஜரட்ணம் (பொறுப்பாசிரியர்), திரு.ஆர்.ஜோர்ச் (பகுதித் தலைவர்), ரே.கிருஷ்ணச்சந்திரா (உப அணித்தலைவர்), திரு.கே.சிவாஜி (அதிபர்), அ.துஷ்யந்தன் (அணித்தலைவர்), திருமதி வி.இலட்சுமணன் (பிரதி அதிபர்), திரு.எம்.நடராசா (விளையாட்டு முதல்வர்), திரு.எஸ்.விஜயகர்ணன் (பயிற்றுநர்),

*நிற்போர்: (மத்தியவரிசையில்) இடமிருந்துவலமாக* - தி.சிற்சபேசன், ப.கார்த்தீபன், த.ராஜ்குமார், சி.சறூன், ஸ்ரீ.சுஜீவன், ச.ஜனாங்கணன், கே.கபிலன், வி.மங்களதாஸ், கே.கஜேந்திரன், எஸ்.சதீஸ்.

*நிற்போர்: (பின் வரிசையில்) இடமிருந்துவலமாக* - அ.பிரதீப், ச.ஜசிதரன், சி.சுமன், பா.ராஜீவன், ஜெ.ஜெயக்கிருஷ்ணன்.

*அ.துஷ்யந்தன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். சகலதுறை ஆட்டக்காரர். அணித்தலைவர்.

*ரே. கிருஷ்ணச்சந்திரா* - வலதுகை ஆரம்பப் பந்துவீச்சாளர். வலதுகைத் துடுப்பாட்டவீரர். 2002 **BIG MATCH** இல் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர். 17 வயதிற்குட்பட்ட யாழ். மாவட்ட அணியின் ஆரம்பப் பந்துவீச்சாளர் (2002). அணியின் உபதலைவர்.

*த.ராஜ்குமார்*- இடதுகை ஆரம்பத் துடுப்பாட்டவீரர். சிறந்த களத்தடுப்பாளர்.

*பா.ராஜீவன்*- அணியின் விக்கெட் காப்பாளர். வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

*ச.ஜசிதரன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். பொறுமையாக நிலைத்து நின்று ஆடக்கூடியவர். சுழல்பந்துவீச்சாளர்.

*எஸ்.சதீஸ்* - வலதுகை ஆரம்பப் பந்துவீச்சாளர். வலதுகை அதிரடித் துடுப்பாட்டவீரர். சிறந்த களத்தடுப்பாளர். 2001 **BIG MATCH** இல் ஆட்ட நாயகன்.

*சி.சுமன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை வேகப் பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர்.

*ஜெ.ஜெயக்கிருஷ்ணன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். சுழற்பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர்.

*ஸ்ரீ.சுஜீவன்* - வலதுகை ஆரம்பத் துடுப்பாட்டவீரர். சுழல்பந்துவீச்சாளர்.

*அ.பிரதீப்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். சிறந்த களத்தடுப்பாளர்.

*வி.மங்களதாஸ்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். மிதவேகப் பந்துவீச்சாளர்.

*கே.கபிலன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். சிறந்த **SLIPS** களத்தடுப்பாளர். அணிக்கு அறிமுகம்.

*சி.சறூன்* - இடதுகைத் துடுப்பாட்டவீரர். இடதுகை வேகப் பந்துவீச்சாளர். சிறந்த **SLIPS** களத்தடுப்பாளர்.

*கே.கஜேந்திரன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர். அணிக்கு அறிமுகம்.

*ப.கார்த்தீபன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை வேகப் பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர். அணிக்கு அறிமுகம்.

*தி.சிற்சபேசன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். சிறந்த களத்தடுப்பாளர். அணிக்கு அறிமுகம்.

*ச.ஜனாங்கணன்* - வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர். அணிக்கு அறிமுகம்.

## மகாஜனா அணி



இருப்போர்: இடமிருந்துவலமாக - திரு.தேவகுமார் (பொறுப்பாசிரியர்) திரு.க.காராளசிங்கம் (விளையாட்டுத்துறைத் தலைவர்), என்.பிரபு (அணித் தலைவர்), திரு.பொ.சுந்தரலிங்கம் (அதிபர்), டி.ரவிசங்கர்(உதவி அணித் தலைவர்), திரு.ஜெயதீபன் (பயிற்றுநர்), சி.ஆரூரன்.

நிற்போர்: இடமிருந்து வலமாக - ஜெ.ஜெயப்பிரியந்தன், நிஷாந்தன், தி.நேசகோபன், ஆர்.ரவிசாந், எஸ்.சிவரதன், பார்த்தசாரதி, இ.ராஜகாந்தன், கே.அன்பழகன், பாலகிருஷ்ண்ன், ஆர்.ராஜேஸ்வரன், ரி.ராஜீவ், பி.அச்சுதன், பி.ஜீவசங்கர்.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை**

ICC Cricket World Cup
SOUTH AFRICA 2003
LG
அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பங்காளி

அபான்ஸ் கம்பனியின்
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்
யாழ்பாண மின்னகம் - யாழ் நகர்
உஷா ஏஜென்சி - யாழ் நகர்
சுந்தர் சன் - மானிப்பாய்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



விடுதலைப் புலிகள் குழுவினருக்கு ஜப்பானிய் விசேட தூதுவர் அகாஷி, ஜப்பானியரின் பாரம்பரிய விருந்துபசாரம் அளிக்கும் காட்சி.

# கடலில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு நினைவுக்கல்

(யாழ்ப்பாணம்)

10.03.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் சிறிலங்காவின் கடற்படை, விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பலைத் தாக்கியழித்தபோது வீரச்சாவடைந்த மாவீரர்களில் நான்கு மாவீரர்களின் நினைவாக, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கற்கள் நடும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

Chief Engineer அம்பிகைவாணனின் உருவப்படம், கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து கொக்குவிலை வந்தடையும். கொக்குவிலிலிருந்து Bosun சிந்துவின் உருவப்படம் எடுத்துச்செல்லப்பட்டு, அஞ்சலிக் கூட்டத்தையடுத்து கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தை வந்தடைந்ததும் அங்கு நினைவுக்கல் நாட்டப்படும்.

இதேவேளை, கோப்பாய் கோட்ட மாவீரர்களான, Engineer தணிகைமாறன்/கனேந்திரன், Able Seaman எழில்கண்ணன் ஆகியோரின் உருவப்படங்களும் அஞ்சலி நிகழ்வையடுத்து மாவீரர் துயிலுமில்லத்தை வந்தடைந்ததும் நினைவுக்கற்கள் நாட்டப்படும்.

மாவீரர் 11 பேரினதும் உருவப் படங்கள் தாங்கிய கப்பல் வடிவ ஊர்தி, அஞ்சலிக்காக நகரினூடு வலம்வரும்.

இதேவேளை, அஞ்சலிக் கூட்டங்கள் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் இன்று நடைபெறவுள்ளன.

தென்மராட்சிக் கோட்டத்தில், திருவுருவப் படங்கள் காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி நகர்ப்பகுதியிலிருந்து, திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தீவகக் கோட்டத்தில், வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் பாண்ட் வாத்தியம் சகிதம், திருவுருவப்படங்கள் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் நினைவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டத்தில் மாலை 4 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் ஆரம்பமாகி, மில்லர் நினைவாலயப் பூங்காவிற்கு திருவுருவப் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்டத்தில் - உடுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மானிப்பாய், சுழிபுரம், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில், திருவுருவப் படங்கள் எடுத்துச்செல்லப்பட்டு, இறுதியாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

(111)

# பலாலி தளத்துக்கு ரெலவ்சன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன், நேற்று பலாலி படைத் தளத்துக்கு விஜயம் செய்தார். இவரை அங்கு யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வரவேற்றார்.

அங்கு ரெலவ்சன், யாழ். குடாநாட்டு நிலைமைகள் குறித்துப் படையதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

கண்காணிப்புக் குழுவின் யாழ். பிரதிநிதி ஒலே புரூண்டமும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

# குடாநாட்டு தரைவழி தபால் சேவை; நாளாந்தம் நடத்த நடவடிக்கை!

குடாநாட்டிற்கான தரைவழித் தபால் சேவையினை, நாளாந்தம் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பிரதம தபாலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து, கொழும்பிலிருந்து ஒன்று விட்டவொரு நாட்களே யாழ். குடாநாட்டிற்கான தபால்சேவை நடைபெறுகின்றது.

இதனால், பல முக்கியமான கடிதங்கள் உள்ளிட்ட நேர்முகப் பரீட்சைகளிற்குரிய கடிதங்கள், உரியவர்களுக்கு மிகவும் தாமதமாகவே கிடைக்கின்றன.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டே தபால் சேவையினை நாளாந்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து கிளிநொச்சி வரை, கொழும்பு தலைமைப்பீடத் தபாலக வாகனம் தபால்களை ஏற்றி வரும். கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை, யாழ்.பிரதம தபாலக வாகனம் தபால்களை ஏற்றி வருமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பூபதி நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் தியாகி அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

நேற்றைய தினம் மாணவர்கள், விரிவுரையாளர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. வளாகத்தின் உட்பகுதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

(ச,சு)

## தாக்குதலைக் கண்டித்து இன்று பேரணி

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்திருக்கும் போரை எதிர்த்து, இன்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இடம்பெறுகின்றது.

பிற்பகல் 1.30 மணியளவில் லிப்டன் சதுக்கத்தில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்படும் என்று, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் தூதரகங்களுக்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடு!

கொழும்பிலுள்ள வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயங்கள், இராஜதந்திரிகளின் வதிவிடங்கள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முப்படைகளும் பொலிஸாரும் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது குறித்த கூட்டம் ஒன்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

வளைகுடாப்போரினால் எழுந்திருக்கக்கூடிய உணர்வலைகள் காரணமாக உயர்ஸ்தானிகராலயங்கள், இராஜதந்திரிகளின் வதிவிடங்கள் முழுமையான பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதன் தூதுவராலயத்துக்கு முன் இடம்பெறப்போவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதுமட்டுமன்றி, பிரித்தானியத் தூதுவராலயத்துக்கு முன்னரும் ஆர்ப்பாட்டம் இடம்பெறக்கூடும் எனவும், ஆனால்- இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் இடம்பெற வேண்டும் என்றும், பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், அவுஸ்திரேலிய தூதராலயத்துக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கொமாண்டோ படையணிகள், கொழும்பிலுள்ள தூதுவராலயங்களுக்கு பலத்த பாதுகாப்பினை அளித்து வருகின்றன.

இன்று ஜும்மா தொழுகையின் பின்னர், முஸ்லிம் மக்கள் தமது எதிர்ப்பினை ஆர்ப்பாட்டங்கள் மூலம் வெளிப்படுத்தலாம் என நம்பப்படுவதால், அந்த ஆர்ப்பாட்டங்களில் கலவரங்கள் ஏற்பட்டு, தூதுவராலயங்கள் தாக்கப்படாமல் இருப்பதற்காகவே பாதுகாப்புக்கள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேசமயம், அமெரிக்கா தலைமையில் ஈராக் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் போரை உன்னிப்பாக அவதானித்து வருவதாக, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் பணியாற்றிவரும் இலங்கையர்கள், உயர்ஸ்தானிகர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பாதுகாப்புக் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவசரகாலத் தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களை மீள அழைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஈராக்கில் உள்ள உயர்ஸ்தானிகர்கள், அதிகாரிகள் அனைவரும் நாடு திரும்புகின்றனர். சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகள், அங்கிருக்கும் இலங்கையரின் பாதுகாப்புக்கு உறுதியளித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(01)

# பதவி விலகிய உறுப்பினர்களை இந்தியத் தூதர் சந்திப்பார்!

(கொழும்பு)

பதவி விலகிய யாழ். மாநகர சபை உறுப்பினர்களை இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென், எதிர்வரும் திங்கட்கிழமை சந்திக்கவுள்ளார். இவர்களது சந்திப்பு உறுதி செய்யப்பட்டுள்ளபோதும், எவ்விடத்தில் சந்திக்கவுள்ளனர் என்பது இதுவரை முடிவாகவில்லை.

இச்சந்திப்பின்போது யாழ். நூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்களை இந்திய உயர்ஸ்தானிகர் வழங்குவார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(01)

# காணாமற்போன பஸ் சாரதி செட்டிகுளத்தில் சடலமாக மீட்பு!

காணாமற்போனதாகக் கருதப்பட்ட- வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச்சாலையின் பஸ் சாரதி நாகூர் கனி அசீர், காட்டினுள் சடலமாக நேற்று கண்டெடுக்கப்பட்டார்.

செட்டிகுளம்- மதவாச்சி வீதியில் நேரியகுளத்துக்குச் சமீபமாகவே, இவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை செட்டிகுளத்துக்கு பஸ்ஸை எடுத்துச் சென்று, இரவுத் தரிப்பிடத்தில் விட்டுவிட்டு, மாங்குளத்திலுள்ள தனது வீட்டுக்குச் செல்வதாகக் கூறியவர் மறுநாள் கடமைக்குத் திரும்பவில்லை.

இது தொடர்பாக செட்டிகுளம் பொலிஸில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டது. அதன்பின்னரே இவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

## இலங்கைக்கான...

வெளியுறவுப் பிரதியமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில், ஜி- 24 அமைப்பைச் சேர்ந்த நாடுகளும் உதவி அமைப்புக்களும் பங்குபற்றும் என்றும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பிற்கு முன்னதாக, உதவி வழங்கும் நாடுகள் குழுக் கூட்டம், ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், நோர்வே ஆகியவற்றின் தலைமையில் நடைபெறும்.

நிதியுதவி என்பது கிறிஸ்மஸ் தாத்தா கொட்டும் பரிசுப் பொருட்கள் அல்ல என்றும் ஒரு கட்டத்தில் அகாஷி குறிப்பிட்டார்.

## ஈராக் மீது...

தென் ஈராக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் பலவும் வெடித்து எரிந்து வருகின்றன. ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனை நோக்கியதாக தாக்குதல் நடாத்தப்படுவதாக, அமெரிக்கா அறிவித்தபோதும்- அவர் முழு இராணுவச் சீருடையில் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார். ஆக்ரோஷமாக அமெரிக்காவையும் புஷ்ஷையும் கண்டித்தார்.

இது இவ்வாறிருக்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நேற்றிரவு அறிக்கையில், இதுவரை பக்தாத்தில் - தமக்குத் தெரிந்தவரை ஒருவர் கொல்லப்பட்டும், 14 பேர் படுகாயமடைந்தும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், உண்மையில் நூற்றுக்கும் அதிகமானோர் நேற்று மட்டும் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, அமெரிக்க விமானப்படையின் ஹெலிகொப்ரர் ஒன்று போரில் தாக்குதலில் ஈடுபட்டபோது, ஈராக்கியப் பிரதேசத்தினுள் வீழ்ந்து நொருங்கியது.

## அமெரிக்க...

களில் எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதேவேளை, சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் "பெற்றோல் இல்லை" என்ற அறிவித்தல் பலகை தொங்கவிடப்பட்டிருந்தது.

இதேவேளை, ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருட்கள் இருப்பில் இருப்பதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச முகாமையாளர் ஜே.அன்ரனிப் பிள்ளை தெரிவித்தார்.

(சு,ரா)

# கண்ணி வெடிகள் அகற்றும் மொசாம்பிக் குழு யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக, மீண்டும் மொசாம்பிக் நாட்டின் ரொன்கோ நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு நேற்று முன்தினம் யாழ். வந்துள்ளது

25 பேர் அடங்கிய இக்குழுவினருடன், மிதி வெடிகளைக் கண்டறியும் அமெரிக்காவின் நான்கு மோப்ப நாய்களும் வந்துள்ளன.

இக்குழுவினர் முன்பு பணியாற்றிய சரசாலைப் பிரதேசத்தில் கண்ணிவெடியை அகற்றும் பணியைச் செய்யவுள்ளனர்.

(ரா)

# அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றி

(தென்னாபிரிக்கா)

இந்திய அணிக்கும், கென்ய அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ண அரை இறுதிப் போட்டியில், இந்திய அணி 91 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 270 ஓட்டங்களைப் பெற்றது. இதில், அணித் தலைவர் கங்கூலி, ஆட்டமிழக்காமல் 114 பந்துகளில் 111 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 83 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கென்ய அணியின் டிக்கோலோ 56 ஓட்டங்களைப் பெற்றார்.

இவ்வாட்டத்தின் சிறப்பாட்டக்காரராக கங்கூலி தெரிவானார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவுடன் இந்திய அணி மோதவுள்ளது.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.20 | 97.10 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.84 | 152.81 |
| 1 யூரோ | 101.82 | 103.15 |
| 1 சுவிஸ் பிராங் | 68.99 | 70.26 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.68 | 57.84 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.85 | 25.85 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.